விலை சதம் 5

முதற் பதிப்பு

பக்கங்கள் 4

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்த
இல்லாமல் விளம்பரம்
செய்ய விரும்புகிறவர்களும்,
அவசரகால அறிவித்தல்
களுக்கு விரும்புகிறவர்களும்
எழுதுங்கள்
மானேஜர்
"சுதந்திரன்
194 A. தட்டாரத்தெரு கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE)
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையிலேனும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களது
சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்
தனிப் பிரதி சதம் 5
3 மாதச் சந்தா ரூ. 6-00
6 மாதச் சந்தா „ 12-00
1 வருடச் சந்தா „ 24-00
மானேஜர்,
"சுதந்திரன்,"
194 A. தட்டாரத்தெரு கொழும்பு.

Phone. 3411

நாமார்க்குங் குடியல்லோம்

புத்தகம் 1 | கொழும்பு, சர்வஜித்து ஹு கார்த்திகை ௴ 23உ திங்கட்கிழமை — Colombo, December, 8 1947 — ஹிஜ்ரி 1367 முஹர்ரம் பிறை 24 | இதழ் 187

பிரதேச பாஷை ஆஸ்தான வித்வான்கள் நியமனம்

கவிஞர்களை ஆதரிக்கும் திட்டம்பற்றி கல்வி மந்திரி அறிவிப்பு

மிகச் சிறந்த நூல்களுக்கு பரிசுகள்

சென்னை, டிச. 6

ஆஸ்தான வித்வான்கள் நியமனத்தைப்பற்றி விளக்கிக் கூறுவதற்காக கல்வி மந்திரி ஸ்ரீ அவினாசிலிங்கம் செட்டியார், நிருபர்களின் கூட்டத்தை இன்று மாலை கூட்டினார்.

பிரதேச பாஷைகளை விருத்தி செய்வதற்காகவும் அவைகளின் அந்தஸ்தை உயர்த்துவதற்காகவும் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், சமஸ்கிருதம் ஆகிய ஐந்து பாஷைகளுக்கும் ஆஸ்தான வித்வான்களை நியமிப்பதாக சர்க்கார் முடிவு செய்திருக்கிறது என்றும் இவர்களைத் தேர்ந்தெடுக்க ஒரு கமிட்டி நியமிக்கப்படுமென்றும் மந்திரி கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

ஆஸ்தான வித்வான்கள் 5 வருஷ காலத்திற்கு பதவியில் இருப்பார்கள். அடுத்த 5 வருஷ காலத்திற்கு வேறு ஆஸ்தான வித்வான்களைக் கமிட்டி நியமிக்கும், அடுத்த தடவை நியமனம் செய்யும்பொழுது ஆஸ்தான வித்வான்கள் பதவிக்குத் தகுதியானவர்கள் கிடைக்காவிட்டால் முன்னிருந்தவர்களே மறுபடியும் நியமிக்க படுவார்கள். ஆஸ்தான வித்வான் இறந்துவிட்டாலும் ராஜினாமா செய்தாலும் அந்த காலி ஸ்தானத்தைக் கமிட்டி மற்றொருவரை நியமித்து பூர்த்தி செய்யும்.

தமிழ் வித்வான்கள் நியமன விஷயம்

தமிழ் ஆஸ்தான வித்வானை தேர்ந்தெடுக்கும் கமிட்டிக்கு சென்னை அண்ணாமலை சர்வகலாசாலைகளிலிருந்து ஒவ்வொரு பிரதிநிதியும் மூன்று தமிழ் புலவர்களும் சர்க்காரால் நியமிக்கப்படுவார்கள்.

அம்மாதிரியே தெலுங்கு, மலையாள, கன்னட ஆஸ்தான வித்வான்களை நியமிக்க அந்த பிரதேச சர்வ கலாசாலை பிரதிநிதிகளும் புலவர்களும் அடங்கிய கமிட்டிகள் சர்க்காரால் நியமிக்கப்படும்.

சமஸ்கிருத ஆஸ்தான வித்வானை நியமிக்க ஏற்படும் கமிட்டிக்கு சென்னை, ஆந்திர, அண்ணாமலை சர்வகலாசாலைகளிலிருந்து ஒவ்வொரு பிரதிநிதியும் இரண்டு சமஸ்கிருத புலவர்களும் நியமிக்கப்படுவார்கள்.

சிறந்த நூல்களுக்கு பரிசு

பிரதேச பாஷைகளில் பண்பு முதலியவைகளைப்பற்றி நூல்களை இயற்றுவதற்கும் சர்க்கார் ஒரு திட்டத்தை நிறுவியிருக்கிறது. கீழ்க்கண்ட ஒவ்வொரு விஷயத்திலும் எழுதப்படும் சிறந்த நூல்களுக்கு பரிசுகள் வழங்கப்படும். தெலுங்கு, தமிழ் நூல்களுக்கு ரூ. 500ம் மலையாளம், தென்கன்னட நூல்களுக்கு ரூ. 250ம் பரிசு அளிக்கப்படும்.

நூல்களை எழுதுவதற்கான விஷயங்களாவன: கவிதைகளும் பாட்டுகளும் கலை, பிரயாணம், சுயசரிதம் போன்ற வியாசங்கள், சிறுகதைகள், நாவலும் நாடகமும், பாஷை, சரித்திர இலக்கிய ஆராய்ச்சி, பூதசாஸ்திரமும், ரசாயன சாஸ்திரமும், இயற்கை சாஸ்திரம், விவசாயம், சரித்திரம், பொருளாதாரம், அரசியல், சமூக சாஸ்திரம், கணிதம், வானசாஸ்திரம், இஞ்சினீயரிங், பாலர்களின் இலக்கியம், கல்வி போதனாமுறை, தத்துவ சாஸ்திரம், மனோதத்துவ சாஸ்திரம், வைத்தியமும் சுகாதாரமும்.

இந்த விஷயங்களில் போதுமான நூல்கள் தற்போது இல்லாததால் வருஷம் ஒன்றுக்கு 6 பரிசுகள் வழங்குவதாக சர்க்கார் உத்தேசித்திருக்கிறது.

கலைஞர்களை ஆதரிக்கவே இந்த திட்டம்

நிருபர்களின் கேள்விக்குப் பதில் அளிக்கையில் ஆஸ்தான வித்வான்கள் தேசிய விழாக்களைப்பற்றி பாட்டுகள் இயற்றுவார்கள் என்றும் மாகாணத்திலிருக்கும் சிறந்த கவிகளுக்கு ஆதரவு கொடுப்பதற்காக இந்த திட்டம் நிறுவப்பட்டிருப்பதாயும் வேறு பிரதேசங்களை சேர்ந்தவர்கள் இம்மாகாணத்தில் வசிக்கிறவர்களாயிருந்தால் அவர்களும் ஆஸ்தானவித்வான்களாக நியமிக்கப்படுவார்கள் என்றும் அவர்களுடைய நூல்கள் சர்க்காருக்குச் சொந்தம் ஆகாது என்றும் ஒவ்வொரு பாஷா பிரதேசத்திலும் பரிசுகள் கலை வளர்ச்சி விழாக்களில் சிறந்த நூல்களுக்கு கலைவளர்ச்சி சங்கங்களின் யோசனையை அனுசரித்து வழங்கப்படும் என்றும் மந்திரி கூறினார்.

எஸ்டேட் சொந்தக்காரர் மீது வழக்கு

மாஜி உத்தியோகஸ்தர் தாக்கல் செய்துள்ளார்

பதுளை, டிச. 6

பதுளை திரு பி எச். அலுவிகாரா என்னும் சென். பர்னட் எஸ்டேட் முதலாளி தாம்வேலை செய்ததற்கு ரூ 345-81 சம்பளமாக கொடுக்க வேண்டுமென்று கூறி திரு. வி. சுப்பிரமணியம் ஒரு வழக்கை பதுளை டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் தாக்கல்செய்துள்ளார். இந்த வழக்குக்கு எதிராளி பதிலளிக்கையில் தாம் வழக்காளிக்குக் கொடுக்க வேண்டிய சம்பளமெல்லாம் கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். வழக்கு விசாரணை டிசம்பர் 9-ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை மாணவர்களுக்கு வெளி நாடுகளில் எஞ்ஜினீரிங் பயிற்சி

அரசாங்கச் செலவில் வருடம் ஒன்றுக்கு 6 பேர் அனுப்பப்படுவர்

கொழும்பு, டிச. 6

வருடமொன்றுக்கு ஆறு பட்டதாரிகளை வெளி நாடுகளுக்கு அனுப்பி எஞ்ஜினீரிங்கில் விசேஷ பயிற்சி தர அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இவற்றில் மூன்று இங்கிலாந்து செல்வதற்கும் இதர மூன்றும் இந்தியா செல்வதற்கும் அளிக்கப்படும். இவற்றிற்காகும் செலவுகளை அரசாங்கமே ஏற்றுக் கொள்ளும்.

இ. இ. காங்கிரஸ் தலைவர் காரியதரிசி

புசல்லாவையில் வரவேற்பு

கொழும்பு, டிச 7

புசல்லாவை சரஸ்வதி வித்தியாலயத்தில் ஸர் டி. பி. டன பொக்கே தலைமையில் இ. இ. காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமான் (பாராளுமன்ற அங்கத்தவர்) இ. இ. காங்கிரஸ் காரியதரிசி திரு கே. இராஜலிங்கம் (பாராளுமன்ற அங்கத்தவர்) ஆகிய இருவருக்கும் ஒரு பொது வரவேற்பு அளிக்கப்பட்டது. இக் கூட்டத்தில் பாடுபட்டு உழைக்கும் தொழிலாளர் தங்கள் பணங்களை வீணாக விரயம் செய்ய வேண்டாமென்றும் அவர்கள் கிராமங்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும் திரு தொண்டமான் கூறினார்.

பௌதிக சாஸ்திர ஆராய்ச்சி குடிசை

தீக்கிரையானதால் ரூ 5000 மதிப்புள்ள சொத்து நாசம்

கொழும்பு, டிச 7

இலங்கை சர்வ கலாசாலை பௌதிக சாஸ்திர குடிசைக் கட்டிடப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை தீப்பிடித்துக் கொண்டதால்சுமார் ரூ 5000 மதிப்புள்ள உபகரணங்கள் முதலியன நாசமடைந்துள்ளன வென்று கூறப்படுகிறது. இந்த குடிசைக் கட்டிடத்தில் பேராசிரியர் ஏ. மயில்வாகனம் கடந்த 18 மாதகாலமாக பரீட்சைகள் நடத்தி வந்தாரென்றும் இங்கு மோசடி வேலைகள் நடந்திருக்க முடியாதென்றும் கூறப்படுகிறது. மின்சாரக் கம்பியில் ஏற்பட்ட கோளாறு காரணமாக தீப்பிடித்திருக்கலாமென்று கூறப்படுகிறது.

கவர்னர் நுவரேலியா விஜயம்

இம்மாதம் 15-ம் தேதி புறப்படுவார்

கொழும்பு, டிச. 7

மே. த. கவர்னரும்மூர்சீமாட்டியும் இராணி மாளிகையிலிருந்து நுவரேலியாவுக்கு இம்மாதம் 15-ம் தேதி திங்கட்கிழமை புறப்படுவார்களென்றும் இவர்களுடன் அந்தரங்க காரியதரிசியும் மெய்ப் பாதுகாப்பாளரும் செல்வர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கம்பளை தொகுதி தேர்தல்ஆட்சேபனை மனு

அடுத்த பெப்ரவரியில் விசாரணைக்கு எடுக்கப்படும்

கொழும்பு, டிச. 7

கம்பளை தொகுதி பாராளுமன்ற அங்கத்தினர் திரு ஆர் எஸ். எஸ். குணவர்தனவின் தேர்தலை ஆட்சேபித்து கம்பளை மகாரா என்னுமிடத்தைச் சேர்ந்த திரு. ஆர். எஸ். பெல்போலா என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட தேர்தல் ஆட்சேபனை மனு 1948 பெப்ரவரி 2-ம் தேதி நீதிபதி திரு வின்ட்ஹாம் முன் விசாரணைக்கு எடுக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

பிரிட்டன் - ஆஸ்திரேலியா விமானப் போக்குவரத்து

பிரிட்டனின் சிவில்விமானப் போக்குவரத்தில் தோல்வி

லண்டன், டிச 6

பிரிட்டனுக்கும் ஆஸ்திரேலியாவுக்குமிடையில் புதிய விமானப் போக்குவரத்து தொடர்பு நேற்று முதல் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது. ஆஸ்திரேலியாவில் சிட்னியிலிருந்து 25 பிரயாணிகளுடன் ஒரு விமானம் லண்டன் விமான நிலையத்துக்கு நேற்று வந்து சேர்ந்துள்ளது. இப்பிரயாணம் ஐந்து நாட்கள் எடுத்துள்ளது. ஆனால் உண்மையில் விமானம் 96 மணி நேரந்தான் எடுத்துள்ளது. இந்த விமானம் டார்வின், சிங்கப்பூர், கல்கத்தா, கராச்சி, கெய்ரோ, பெனிடோகாஸ் முதலிய இடங்களில் தங்கியுள்ளது. ஒவ்வொரு பிரயாணத்திலும் 35 பிரயாணிகள் ஏற்றிச் செல்லப்படுவார்கள் என்றும் வாரத்தில் மூன்று பிரயாணங்கள் இருக்குமென்றும்கூறப்படுகிறது. இந்த புதிய விமானப் போக்குவரத்து ஸ்தாபிதத்தினால் உலக சிவில் விமானப் போக்குவரத்து துறையில் பிரிட்டன் தோல்வியடைந்துள்ளதைக் குறிக்கின்றதென்று கூறப்படுகிறது (ரா)

ஸர். ஸி பி. க்கு சர்தார் பட்டேல் அழைப்பு

கப்பல் கொள்கை சம்பாஷணையில் கலந்துகொள்வார்?

உதகமண்டலம், டிச 6

திருவாங்கூர் மாஜி - திவான் ஸர். ஸி. பி. ராமசாமி ஐயர், நேற்று புதுடில்லிக்குப்புறப்பட்டார் இவர் முதலில் கோவையிலிருந்து பம்பாய் சென்று பிறகு அங்கிருந்து புதுடில்லி போவார். புதுடில்லியில் ஒரு வாரம் தங்கியிருப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய யூனியன் சர்க்கார் சார்பில் டிபுடி பிரதம மந்திரி சர்தார் படேல் ஸர். ஸி பி. யை அழைத்துள்ளதாகத் தெரிகிறது. கப்பல் கொள்கை குறித்து இந்திய சர்க்கார் - பிரிட்டிஷ் சர்க்காரிடையே நடக்கவிருக்கும் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதற்காகத்தான் இவர் டில்லி சென்றுள்ளதாகநம்பப்படுகிறது ஸ்டெர்லிங் மிச்சம் குறித்து சம்பாஷணைகள் நடத்த லண்டன் தூதுகோஷ்டி இந்தியா வரும்போது இவ்விஷயம் பரிசிலனை செய்யப்படும் என்றும் தெரிய வருகிறது.

கைமோசக் கொலை புரிந்த பெண்ணுக்கு 10 வருடச் சிறை

களுத்துறை, டிச. 6

பதுவத்தை என்னுமிடத்தில் மகமாகி அலிஸ் நோனா என்னும் பெண் தன்னுடன்வசித்து வந்த எல். சைமன் சிங்கோ என்பவரை வெட்டிக் கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட வழக்கு களுத்துறை அசைஸ் நீதிபதி திரு விஜயவர்தன முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. எதிரி கைமோசக் கொலை புரிந்ததாக ஒப்புக்கொண்டதால் நீதிபதி எதிரிக்கு 10 வருடச் சிறைத் தண்டனை விதித்தார்.

ஜப்பானுக்கு ஆஸதிரேலிய கம்பளி நூல்

ஹாங்காங் மூலம் வாங்க ஏற்பாடு

டோக்கியோ, டிச 6

ஆஸ்திரேலியாவுக்கும் ஜப்பானுக்கும் இடையில் கம்பளி நூல் வாங்குவதுபற்றி பேச்சுவார்த்தை நடைபெற்று வந்தது. ஜப்பானுக்குக் கொடுக்கப்படும் கம்பளி நூலுக்கு 14 நாட்களில் பணம் செலுத்தப்படவேண்டுமென ஆஸ்திரேலியா கேட்டிருந்தது. ஆனால் ஜெனரல் மாக் ஆர்தர் தலைமைக் காரியாலயம் பணம் செலுத்தப்படுவதற்கு 90 நாட்கள் தவணை கேட்டிருந்தது.

இப்பொழுது ஹாங்காங்கிலுள்ள ஒரு ஜவுளி வர்த்தக ஸ்தாபனத்தின் மூலம் சமீபத்தில் பெருந்தொகையான ஆஸ்திரேலிய கம்பளி நூலை ஜப்பான் வாங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதனால் ஆஸ்திரேலியாவுக்கும் ஜப்பானுக்குமிடையே கம்பளி நூல் சம்பந்தமாக இருந்த பேச்சுவார்த்தை முட்டுக்கட்டை தவிர்க்கப்பட்டுவிட்டது. (ராய்ட்டர்)

இந்தோனேஷிய தூதுகோஷ்டி பட்டேவியா சேர்ந்தது

சமாதானப்பேச்சுவார்த்தை திங்கட்கிழமை ஆரம்பிக்கும்

பட்டேவியா, டிச 6

பட்டேவியாவிலே டச்சு தூதுக் கோஷ்டியினருடனும் ஐ நா. ஸ்தாபன பாதுகாப்பு சபையின் சமரஸக் கமிட்டியுடனும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு இந்தோனேஷிய குடியரசு பிரதமர் டாக்டர் அமிர் சுஜாரிபோதின்னும் மற்றும் தூதுகோஷ்டியினரும் ஆஸதிரேலிய இந்திய விமானங்களில் பட்டேவியாவுக்கு இன்று வந்து சேர்ந்தனர். அமெரிக்க கடற்படை கப்பலான ரென்விலே என்னும் கப்பலில்பேச்சுவார்த்தைகள் திங்கட்கிழமை நடைபெறும். டச்சு தூதுகோஷ்டியுடன் நெதர்லந்து புனருத்தாரண வேலைகள் மந்திரியும் சேர்ந்துகொள்வார், ஜாவாவில் டச்சு போலிஸ நடவடிக்கைக்குப் பின் டாக்டர் அமிர்சுஜாரிபோதின் பட்டேவியாவுக்குச் செல்வது இதுவே முதன்முறையாகும். (ராய்ட்டர்)

சிஙகப்பூரில் இருந்து புறப்பட்ட விமானம்

காணப்படவில்லையாம்

சிங்கப்பூர், டிச. 6

சிங்கப்பூரில் இருந்து நேற்று சயாமில் பாங்காக் என்னுமிடத்துக்கு மூன்று பேர்களுடன் பீனங்மார்க்கமாகப் புறப்பட்ட ஆஸதிரேலிய விமானமொன்று காணப்படவில்லையென்று சிங்கப்பூர் பொதுஜன விமானப் போக்குவரத்து சபை அதிகாரிகள் அறிவிக்கின்றனர். இந்த விமானம் இந்தோனேஷிய குடியரசுக்குச் சொந்தமான வட சுமத்திரா பிரதேசத்தில் இறங்கியிருக்கக் கூடுமென்றும் கூறப்படுகிறது. (ராய்ட்டர்)

புதுடில்லி கைத்தொழில் மகாநாடு

உற்பத்தி பெருக்கங்கள் குறித்து விவாதங்கள் நடைபெறும்

சென்னை கைத்தொழில் மந்திரியும் கலந்துகொள்வார்

சென்னை, டிச. 6

கைத்தொழில் மந்திரிகள் மகாநாடொன்று டிச. 15, 16 தேதிகளில் டில்லியில் நடைபெறும். சென்னை சர்க்கார் கைத்தொழில் மந்திரி ஸ்ரீ எச். சீதாராம ரெட்டியும் அபிவிருத்தி இலாகா கூட்டு காரியதரிசி ஸ்ரீ கே. ஜி மேனனும் இம்மகாநாட்டில் கலந்து கொள்வர்.

பட்டு உற்பத்தி விநியோகம் குறித்து டிச 17உ ஓர் மகாநாட்டில் இவர்கள் கலந்து கொள்வர். டிச 18ந் தேதி இவர்கள் சென்னை திரும்புவர் என்று நம்பப்படுகிறது.

பொது உற்பத்தியை உடனடியாக அதிகரிக்க குறிப்பாக போக்குவரத்து, நிலக்கரி, மூலப் பொருள்கள் கொள்முதல் தொழில்போன்ற விஷயங்கள், கைத்தொழில் மந்திரிகள் மகாநாட்டில் விவாதிக்கப்படும்

எதிர்கால தொழில் அபிவிருத்தி குறித்தவரை யந்திர கருவி சாதனங்களை இறக்குமதி செய்யவும். வெளிநாட்டு பரிவர்த்தனை ஏற்றுமதிகள் மூலமும் தேவையான காலத்தில்திட்டங்கள் அமுல் நடத்துவது மூலமும் உற்பத்தியைப்பெருக்கவிவாதங்கள் நடைபெறும்.

குடிசைத் தொழில் அபிவிருத்தி செய்ய ஓர் அகில-இந்திய குடிசைத் தொழில் சங்கம் அமைப்பது குறித்தும் இம்மகாநாட்டில் ஆராயப்படும்.

இரும்பு, மின்சார, ரசாயண தொழில்கள், சணல், கயிறு, தோல்வார் முதலியன பட்டு ரேயான், செயற்கை பட்டு மேஜோடு, வர்ணங்கள், வார்னிஷ், கம்பளி, கண்ணடி, மோட்டார் டிராக்டர் போன்ற தொழில் அபிவிருத்தி மீது ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ள அறிக்கைகள் இம்மகாநாட்டில் விவாதிக்கப்படும்.

இரும்பு, எஃகு, பஞ்சு ஜவுளி காகிதம், நிலக்கரி போன்றவைகளின் கட்டுப்பாட்டைத் தொடர்ந்து நடத்துவது பற்றியும் கோரா, பஞ்சு. சணல், மரம், சிமெண்ட், ரசாயனங்கள், மருந்துகள் போன்ற சாமான்களுக்கு கன்ட்ரோல் விதிப்பது குறித்தும் இங்கு ஆலோசிக்கப்படும்.

பட்டு உற்பத்தி பண்ணைக்கு நிரந்தரக் காரியதரிசி விஜயம்

கொழும்பு, டிச. 7

கைத்தொழில், கைத்தொழில் ஆராய்ச்சி, மீன்பிடி தொழில் மந்திரியின் நிரந்தரக் காரியதரிசி திரு ஆர். எச். பாஸெட், கைத்தொழில் இலாகா டைரக்டர் திரு டபிள்யூ. ஜே ஏ. வான் லன்கன்பர்க் என்பவருடன் புத்தூரில் உள்ள அரசாங்க பட்டு உற்பத்தி பண்ணையைப் பார்வையிட்டார்.

கொழும்பு, டிச. 7

இலங்கையிலிருந்து இம்மாதம் 20-ம் தேதி புறப்படும் "அரிஞ" என்னும் நோர்வே கப்பலில் ஹம்பர்க் நகருக்கு 300 டன் தும்பு அனுப்பப்படும், 1939-ம் ஆண்டிற்குப்பின் ஜெர்மனிக்கு முதன் முதலில் இலங்கையிலிருந்து பொருள் அனுப்பப்படுவது இது வே முதன் முறையாகும்.

கள்ளமாக அரிசி கடத்தினர்

ரூ 1500 அபராதம்

கொழும்பு, டிச. 7

கொட்டாஞ்சேனை ஸகின்னர்ஸ ரோட்டைச் சேர்ந்த எச் டொன் சைமன் என்னும் வாடகைக் கார் சாரதி ஒருவர் 213 கொத்து அரிசியை உத்தரவின்றி கள்ளமாக கடத்தியதாகக் குற்றஞ்சாட்டி கொழும்பு தற்காலிக பிரதம மாஜிஸ்டிரேட் முன் கொண்டுவரப்பட்ட வழக்கில் மாஜிஸ்டிரேட் திரு பண்டித குணவர்தன எதிரிக்கு ரூபாய் 1500 அபராதம் அல்லது ஆறுவார சிறைத் தண்டனையும் கோர்ட்டு கலையும்வரை சிறைத் தண்டனையென்றும் தீர்ப்பளித்தார்.

பீல்டு மார்ஷல் ஆக்கின்லெக லண்டன் பிரயாணம்

மால்ட்டா, டிச 6

இந்தியா-பாகிஸதான் இராணுவங்களின் பிரதம தளபதியாக இருந்து அப்பதவியிலிருந்து விலகிச் செல்லும் பீல்டு மார்ஷல் சர் ஸி. ஆக்கின்லெக் லண்டனுக்குச் செல்லும் வழியில் மால்ட்டாவில் இரு இரவுகள் தங்கியிருந்தார். இன்று இவர் விமான மூலம் மால்ட்டாவில் இருந்து லண்டன் புறப்பட்டுள்ளார் (ராய்ட்டர்)

சீனி, வெண்ணெய் ரேஷன்

கிறிஸ்மசுக்காக அதிகரிக்கப்படும்

கொழும்பு, டிச. 7

கிறிஸ்மஸ காலத்துக்காக சீனி, வெண்ணெய் ரேஷன் அதிகரிக்கப்படும் என்று கூறப்படுகிறது. வெண்ணெய் சுமார் 50சத விகிதம் அதிகரிக்கப்படும் என்று தெரிகிறது. சீனிரேஷன் அதிகரிப்பதுபற்றி இன்னும் ஆலோசிக்கப்படவில்லை

பதிவுசெய்யும் அதிகாரிகளின் குறைகள்

களுத்துறை, டிச 6

களுத்துறை டிஸடிரிக்ட் இறப்புபிறப்பு, விவாகப் பதிவுசெய்யும் அதிகாரிகள் சங்கக் கூட்டமொன்று நடைபெற்றபோது அவர்களின் குறைகளை கவர்னருக்கு அறிவிப்பதென்று தீர்மானிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்ட தீர்மானங்கள் அடங்கிய மகஜர் ஒன்றை கவர்னருக்கு அனுப்புவதற்கு தலைவர் திரு டி. எச். எஸ. நானயக்காராவுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது

மாத்தளை, டிச. 6

மாத்தளையிலுள்ள சுதேசி தியேட்டர் படமாளிகை புதன்கிழமை இரவு தீக்கிரையாகிவிட்டது. இந்த விபத்தில் ஒருவரும் சிக்குப்படவில்லையென்று கூறப்படுகிறது. ஏற்பட்ட சேதம் ஒரு லட்சம் ரூபாய்க்குமேல் இருக்குமென்று கூறப்படுகிறது. போலிஸார் விசாரணை நடத்துகின்றனர்.

சுதந்திரன்
THE "SUTANTIRAN"
194 ச, நட்டார்த் தெரு, கொழும்பு.
போன்: 8411

சர்வஜித்துஞு கார்த்திகை மீ 23 உ
திங்கட்கிழமை

தூங்கவேண்டாம்!

பழைய காலத்தில் பாஷைகளை வளர்ப்பதில் அரசர்கள் முக்கிய பங்கு எடுத்துக்கொண்டார்கள். புலவர்களைத் தம் கண்கள்போல் பாதுகாத்து வந்தார்கள். அவர்களுக்குப் பரிசில்கள் ஈந்தார்கள், தங்கள் அவையகத்து ஆஸ்தான வித்துவான்களாகத் திறமைமிக்க புலவர்களை நியமித்து வைத்தார்கள். எந்தப் பாரகாவியத்தை எந்த பாஷையில் எடுத்துக்கொண்டாலும் ஒரு அரசரின் கேள்விப்படியே பாடப்பெற்றதாகத்தான் காணப்படுகின்றது. இது இலங்கையும் இந்தியாவும் தம் சொந்த மன்னர்களால் ஆளப்பட்ட காலத்தில் நடந்தனவாகும்.

பின்பு அந்நியர் ஆட்சி வந்தது. மன்னர்கள் ஒழிந்தார்கள். அந்நியர்கள் பாஷை அரசபாஷையாக்கப்பட்டது. தேச பாஷையைப் படிப்பது வேப்பிலைக் கஷாயம் குடிப்பதுபோன்று எண்ணினர்கள் மக்கள். வித்துவான்களைத் தேடுவாரில்லை. என்றாலும் தேச பாஷைகள் இந்தியாவிலும் இலங்கையிலும் முற்றாக அழிந்தொழியவில்லை.

இந்தியாவில் சிறிது காலத்திற்கு முன்பு புத்துணர்ச்சி தோன்றியது. அந்நிய ஆதிக்கத்தை அடியோடு அகற்ற இந்திய தேசியக் காங்கிரஸ் முனைந்தது. தாய்ப் பாஷைகளையுங் காப்பாற்ற ரமேஷசந்திரதத்தர், பங்கிம்சந்திரசாட்டர்ஜி ரவீந்திரநாத் தாகூர், சுப்பிரமணிய பாரதிபோன்ற ஆவேசக கவிகள் உதித்தார்கள். புதுணர்வும், புதிய கலையும், சுதந்திர தாகமும வளர்ந்தது. காந்தி யுகத்தில் இன்று இந்தியா சுதந்திர நாடாக விளங்குகின்றது.

சுதந்திரம் பெற்றதும் இந்தியா சும்மா இருக்கவில்லை: சுவபாஷைகளுக்கு அந்தஸ்தையும், அபிவிருத்தியையும் ஏற்படுத்துவதற்கு முன்வந்துள்ளார்கள் இதற்காக தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், சமஸ்கிருதம் ஆகிய ஐந்து பாஷைகளிலும் ஆஸ்தான வித்வான்களை நியமிப்பதற்கு சென்னை அரசாங்கம் முடிவு செய்துளளது. இன்னும் அப்பாஷைகளில் நூல்கள் எழுதுபவர்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படுமென்றும் கல்வி மந்திரி திரு அவினாசிலிங்கம் செட்டியார் கூறியுள்ளார். இந்நூல்களில் தமிழ், தெலுங்கு நூல்களுக்கு ரூபாய் ஐஞ்ஞூறும் மலையாளம், தென், கன்னட நூல்களுக்கு ரூபாய் இருநூற்று ஐம்பதும் கொடுக்கப்படுமென்றும் சொல்லியுள்ளார். இப்படி வருடமொன்றிற்கு ஆறு பரிசில்கள் வழங்கப்படுமாம் சிறந்த சுவபாஷா வித்துவான்களை ஆதரித்துத் தாய் பாஷைகளை பேணிவளர்க்கக் கொண்டுவர முன்வந்துள்ள சென்னை அரசாங்கத்தை நாம் பாராட்டுகிறோம்.

இதே நேரத்தில் இலங்கை நிலைமையைப் பார்ப்போம் இங்கு தமிழும் சிங்களமும் தான் தேச பாஷைகள். வகுப்புவாதச் சிங்கள அரசியல்வாதிகள் சிங்களம்தான் அரச பாஷையாக இருக்கவேண்டும் என்று கருமங்கள் ஆற்றுகிறார்கள். சென்னை கல்வி மந்திரி தமிழராக இருந்தாலும் மற்றும் ஆங்குள்ள இதர சுவபாஷைகளுக்குத் தகக அந்தஸ்துக்கொடுத்து வளர்க்க முன்வந்திருக்கிறார், இங்குள்ள மந்திரிகள் அவரைப்பின்பற்றித் தம் கடமையை நடுவு நிலைமையுடன்தான் செய்வது தர்மமாகும். உண்மையில் தேச பாஷைகளை வளர்ப்பதில் இலங்கை அரசாங்கத்துக்கு அக்கறை உண்டென்ருல் இரு மொழியிலும் ஆஸதான வித்துவான்களை நியமித்தல்வேண்டும் இரு மொழிகளிலும் ஆக்கப்படும் சிறந்த புதிய நூல்களுக்கும் தக்க பரிசில்கள் வழங்க ஏற்பாடுகள்செய்தல்வேண்டும்.

ஒருவிஷயத்தில் நாம் தமிழ் மக்களை எச்சரிக்கை செய்ய வேண்டியிருக்கிறது. இலங்கைத்தமிழ்மக்கள் இன்னும் தங்கள் தாய்மொழிப்பற்றை முற்றாகக் கொள்ளவில்லை. தூக்கத்திலதான் இருக்கிறார்கள். ஒருவர் இருவர் நன் முயற்சியால்தான் ஏதோ நடைபெறுகின்றது இது பூரண நன்மையை அளிக்கமாட்டாது. சென்ற மூன்று வருடங்களுக்கு முன்பு ஆரியதிராவிடபாஷாபிவிருத்திச்சங்கத்தார்சிறுவர்களுக்கென இலக்கியப் பாடல்கள் எழுதுபவர்களில் சிறந்தபாக்களை எழுதும் மூவருக்குச்சன்மானம்வழங்குவதாகத் தெரிவித்திருந்தார்கள் பலர் எழுதியனுப்பினர்கள். மூவருக்குப் பரிசிலும் வழங்கப்பெற்றது. ஆனுல் அம்மூவரும் எழுதிய பாடல்கள் இன்று வரைக்கும் வெளியிடப்படவில்லை. காரணம்? அக்காலத்தில் சங்கக்காரியதரிசியாக இருந்த திரு சதாசிவஐயர் அவர்கள் ஓய்வெடுத்துக் கொண்டமையாலும் அவர் ஓய்வெடுத்துக்கொண்டால் அச்சங்கத்தில் உள்ள மற்றவர்களும் ஓய்வெடுத்துக்கொண்டார்களா? இன்னும் அச்சங்கத்தினரால் நடத்தப்பெறும் பரீட்சைகளில் தேர்ச்சிபெற்றவர்கள் பெயர்களையும் இப்பொழுது உரியகாலத்தில் வெளிப்படுத்துவதில்லை என்று பல புகார்கள் கூறப்படுகின்றன. இந்த நிலைமையில் தமிழ் மொழிவளர்வதெங்ஙனம்?

இதன் மேலாக அரசாங்கமும் தமிழ்மொழிக்குத் தக்க ஸ்தானத்தை கொடுப்பதாகக் காணப்படவில்லை. முன் பண்டித பரீட்சையில்சித்தியெய்தியவர்கள் ஆசிரியர்களாகக்கடமையாற்றினால் மாதம்அவர்களுக்கு ஒரு பத்து ரூபா கூடக் கிடைக்கும். இப்பொழுது அது நிறுத்தப்பட்டுள்ளது. ஆங்கில ஆசிரியர்களுக்குப்போன்ற சம்பளம் தமிழ் ஆசிரியர்களுக்குக் கிடையாது. தமிழ்ப் புதினப் பத்திரிகையாலயங்களைத் தன்னும் எடுத்துக்கொள்ளுவோம் ஒரு ஆங்கிலப் பத்திரிகையின் வெளியூர் நிருபர்களாக இருப்பவர், தமிழ்ப் பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்களில் பார்க்கக் கூட மாசவேதனம் பெறக்கூடியதாக இருக்கின்றது. இந்த நிலைமையில் வேறுவழியற்றவர்கள் தான் தமிழை வளர்க்க இலங்கையில் முன்வரக்கூடும் மற்றவர்கள் ஆங்கில உத்தியோகங்களைத்தான் தேடிச் செல்வர்.

சிங்கள மக்கள் விழித்துக் கொண்டார்கள், சிங்களப்பாஷைக்கு உயர்தர அந்தஸ்துக் கொடுப்பதற்கு ஆவனவெல்லாம் செய்கிறார்கள். தமிழ் மக்கள் இன்னும் தூங்கியிருப்பது அழகல்ல தமிழ்த்தேசத் தொண்டர்கள் இதைத் தங்கள் முதல் வேலையாக எடுத்துக்கொள்ளவேண்டும். அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தமிழ் மக்களின்நலனுக்காக வேலைசெய்து வருகின்றது. அதன் தலைவர்கள் தமிழ் மொழியை மேலும் வளர்க்க முன்வரவேண்டும். போதியவேதனமின்றித்தவிக்கும் தமிழ்ப்பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கும், மற்றையோர்களுக்கும் தக்கவேதனம் பெறும்படி அரசாங்கத்துடன் போராடவேண்டும். தக்கவேதனம் பெறக்கூடிய நிலைமை ஏற்பட்டால் ஆங்கிலம் பயின்றவர்கள் கூடத் தமிழ்உத்தியோகம் தேடிவருவார்கள். தமிழ்மொழியும்தானேவளரும்.

ஆஸதிரேலிய பொருளாதார நிலை நிபுணர்

இலங்கையின் நிலையையும் பரிசீலனை செய்வார்

கொழும்பு, டிச. 7

குவின்ஸ்லண்டின் பொருளாதார நிலை நிபுணராகிய திரு கொலின் கிளார்க் என்பவர் இந்தியாவிலிருந்து திரும்பும் வழியில் இங்கு நேற்று வந்து சேர்ந்தார். இவர் இந்தியாவின் வேண்டுகோளுக்கிணங்கிச் சிறிது காலம் இந்திய அரசாங்கத்தின் பொருளாதார நிலையைக் கவனித்து அதை திருத்தியமைக்க வேண்டிய யோசனைகளைக் கூறியிருக்கின்றார்.

அதே வேலையை இங்கும் செய்யும்படி இலங்கை அரசாங்கத்தாரும் அவரை வேண்டியதின் பேரில் அவர் இங்கு தங்கும் ஒரு கிழமை முழுவதும் எமது பொருளாதார நிலைமையைப்பற்றி அந்த இலாகா உத்தியோகஸ்தருடன் கலந்து பேசுவார்.

பர்மாவிலுள்ள இந்தியரின் பிரஜா உரிமைகள்

பார்லிமெண்டில் பிரதம மந்திரி நேருஜி விளக்கம்

புதுடில்லி, டிச. 5

பர்மாவிலுள்ள இதர மக்கள் எத்தகைய பிரஜா உரிமைகளை இப்போது அனுபவித்து வருகிறார்களோ அத்தகைய பிரஜா உரிமைகளைத்தான் அங்குள்ள இந்தியர்களும் அனுபவித்துவருகிறார்கள் என்று பண்டித ஜவஹர்லால் நேரு இன்று பார்லிமெண்டில் பண்டித எச். என். குன்ஸ்ரு கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கூறினர். பர்மாவின் புதிய அரசியல் அமுலுக்கு வரும்போது அந்த அரசியலின் 11-வது ஷரத்தின் 4 வது பிரிவில் கூறப்பட்டிருப்பதற்குத் தகுந்த ரீதியில் இந்தியர்களின் பிரஜா உரிமை இருக்குமென்றும் நேருஜி தெரிவித்தார். புதிய அரசியல் அமுலுக்கு வரும் நாளுக்கு முன்னுள்ள 10 வருஷத்தில் 8 வருஷங்களுக்குக் குறையாமல்! பர்மாவில வாழ்ந்திருந்த ஒரு இந்தியர் தான் நிரந்தரமாக பர்மாவிலேயே வாழப் போவதாக கூறுவாரானுல் அவர் பர்மாவின் பிரஜையாகிவிடுகிறார். இதர இந்தியர்களின் பிரஜா உரிமை பற்றி பர்மா சர்க்கார் பின்னர் சட்டம் பிறப்பிக்கும்.

காலி குதிரைப் பந்தயம் ஆரம்பம்

7 வருடத்திற்குப் பின்

கொழும்பு, டிச. 7

காலி ஜிம்கானு கிளப்பின் ஆதரவில் நடக்கும் குதிரைப் பந்தயம் இம்முறை கிறிஸமஸ் நாட்களில் ஓடப்படும் இதற்காக காலிக் கண்மையிலிருக்கும் பூசா என்னுமிடத்திலுள்ள அவர்களது மைதானம் ஆயத்தப் படுத்தப்பட்டிருக்கிறது. யுத்தகாலமாகிய சென்ற 7 வருடமும இங்கு பந்தயம் ஓடவில்லை இங்குதான் யுத்தத் தற்பிடிபட்ட மறியற்காரரைக் காவலில் வைத்திருந்தது. இந்த முறை நடக்கும் குதிரைப் பந்தயத்துக்காகச் செல்லவிருக்கும் பிரயாணிகளுக்கு ரெயில்வே இலாகாவும் எல்லாப் போக்குவரதது வசதிகளும் அளிக்க ஏற்பாடுகள் செய்திருக்கின்றனர்.

நாட்டியகாரி எழுத்தாளராகவும் விளங்குகிறார்

கொழும்பு, டிச. 7

இலங்கை வாசியாகிய நிரஞ்ஜலதேவி என்பவர் இந்தியாவிலே நாட்டியத்தில் புகழ்பெற்றவர். இவர் இப்போது இலங்கையிற்பல பகுதிகளில் நாட்டியக்கச்சேரிகள் நடத்துகிறார் தாய்நாடு கண்ணம்மா என காதலி முதலிய சினிமாப் படங்களிலும் சில நடனங்கள் ஆடியிருக்கிறார் அமெரிக்காவுக்கும் போய் அங்கும் புகழ்தேட இவருக்கு அலாதியான ஆசை. இவர் பல பத்திரிகைகளுக்கும், மாதாந்த வெளியீடுகளுக்கும் நாட்டியக் கலையைப் பற்றியும் சிறு கதைகளும் எழுதியனுப்புவதுமுண்டு.

பாடப் புத்தகத்திலும் வல்லரசுகள் தகராறு

பேர்லின், டிச. 7

பேர்லின் பள்ளிக்கூடங்களில் இரு அமெரிக்க ஆசிரியர்கள் உட்பட ஆறு ஆசிரியர்களின் நூல்களைப் பாடப் புத்தகங்களாக ஏற்படுத்துவதை அமெரிக்க கல்வி அதிகாரிகள் தடை செய்தனர். இதை ரஷிய அதிகாரிகள் ஆட்சேபித்தனர். இதிலும அமெரிக்கா ரஷியாமீது துவேஷம் பாராட்டுவதாக அவர்கள் குற்றஞ்சாட்டினர். பிரிட்டிஷ அதிகாரிகள் அமெரிக்க அதிகாரிகள் செயலை ஆதரித்தனர். (ராய்ட்டர்)

உலகிலே இந்தியா தலை நிமிர்ந்து உலாவும்

அமைதியையும் முன்னேற்றத்தையும் நிலைநாட்டும் சக்தியாக இயங்கும்

காஷ்மீரத்தில் பண்டித நேருவின் கர்ஜனை

ஜனுவரி முதல் பாகிஸ்தானுக்கு அனுப்பும் தந்தி கட்டணத்தை திருத்தி அமைக்க இலங்கை சர்க்கார் முடிவு

புதுடில்லி, டிச 6

இந்தியாவின் "குயில்" என்றழைக்கப்படும் கவியரசியான ஸ்ரீமதி சரோஜினி நாயுடு இன்று இந்தியாவின் முதலாவது ஸ்திரீ கவர்னர் ஆனர். இதுவரை அவர் காந்திஜியின் வைத்தியரான டாக்டர் பிதன் சந்திரராய்க்குப் பதிலாக ஐக்கிய மாகாணத்திற்குத் தற்காலிக கவர்னராக இருந்தார். டாக்டர் ராய் கவர்னர் பதவியை ஏற்க முடியாத நிலைமையிலிருப்பதாகத் தெரிவித்ததால் இந்திய சர்க்கார் இன்று ஸ்ரீமதி சரோஜினி தேவியையே நிரந்தரமாகக் கவர்னராக நியமித்துவிட்டார்.

ஜம்முவில் நேருஜி

ஜம்மு, டிச 6

புதுடில்லியிலிருந்து இங்கு விஜயம் செய்த பண்டித ஜவஹர்லால்நேரு பதினாயிரக்கணக்காக கூடியிருந்த ஜனக் கூட்டத்தில் இன்று பேசினர் அவர் காஷ்மீர் பிரதம மந்திரி ஷேக் முகமது அப்துல்லாவுடன் அகதிகள முகாமைப் பார்வையிட்டார். பொதுக் கூட்டத்தில் பேசியபோது பண்டித நேரு பின்வருமாறு தெரிவித்தார்:-

இந்த காஷ்மீர் அலுவலைக் கூடிய சீக்கிரம் திட்டவட்டமாக முடித்துவிடுவோம். வேலைகளை அரைகுறையாகச் செய்வதில் நமக்கு நம்பிக்கை கிடையாது. அதிகமான இந்தியத் துருப்புகளைக் காஷ்மீரத்தைப் பாதுகாக்க நடைபெறும் போருக்கு அனுப்பி வைப்போம். நமது சக்திகளனைத்தையும் ஒன்றுதிரட்டி வெற்றிபெறும் வரை போராடுவோம்.

மலைஜாதியார் காஷ்மீரத்தில் படையெடுத்து வந்து அவர்கள் புரிந்த அட்டூழியங்கள் கொஞ்சநஞ்சமல்ல. குடிமக்கள் அளவற்ற கொடுமைக்குட்படுத்தப்பட்டார்கள். அதனுல் நாம் வருத்தப்பட்டுக் கொண்டிருப்பதற்கு இது சமயமல்ல நாம் ஐக்கியமுடன் ஒன்றுதிரண்டு காஷ்மீர் மக்கள் விருப்பத்திற்கு மாருக அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்த முயலும் எதிரிகளை முறியடிக்க வேண்டும் காஷ்மீரத்திற்கு எவ்வித அரசாங்கம் தேவை யென்பதை முடிவு செய்ய வேண்டியது, எதிரிகளை முறியடித்த பின் காஷ்மீர் மக்களின் பொறுப்பாகும் இது விஷயத்தில் இந்தியா எவ்விதத்தும் தலையிடாது.

காஷ்மீர் மக்கள் ஷேக் அப்துல்லாவைப் பின்பற்றுவார்களாக! நீங்கள் அனைவரும் ஒற்றுமையாகி எதிரிகளுடன் போராடவேண்டும். இந்திய துருப்புகள் எதிரிகளைக் காஷ்மீரத்திலிருந்து விரட்டியடித்தபோதிலும் காஷ்மீர மக்களின் ஒத்துழைப்பின்றி அது சாத்தியமாகாது. சுதந்திரம் பெற்றதும் சென்ற மூன்று மாதகாலமாக துரதிர்ஷ்டவசமாக இந்தியாவில் ஒரு பகுதியில் இவ்வித சகோதரச் சண்டை ஏற்பட்டிருக்காவிடில், உலக அரசியலில் இந்தியா அரும்பெரும் காரியங்களைச் சாதித்திருக்கும். இப்பொழுதுள்ள காரியங்களைவிட இன்னும் அதிகமான காரியங்களைச் சாதித்திருக்கமுடியும், இந்தியாவில் இவ்விதமான சம்பவம் நிகழ்ந்தபோதிலும் இந்த சோதனையிலிருந்து இந்தியா மீண்டும் உலகில்அமைதியையும் முன்னேற்றத்தையும் ஏற்படுத்துவதில் இந்தியா பெரும் சக்தியாக இலங்கும்.

அக்கூட்டத்தில் ஷேக் முகமது அப்துல்லா பின்வருமாறு பேசினர்:-

காஷ்மீர் போராட்டம் ஒரு பெரிய லட்சியத்தைப் பெற பந்தயப் பணயமாக ஆக்கப்பட்டிருக்கிறது. இரு நாட்டுக் கொள்கை இருப்பதா இறப்பதா என்னும் பிரச்னை காஷமீர் போர் முடிவைப் பொறுத்திருக்கிறது இப்போரில் நாம் பாகிஸ்தானைத் தோற்கடித்தோமாகில் அகில இந்தியாவின் 40 கோடி மக்களுக்கும் நாம் விமோசனமளித்தவர்களாவோம். இந்தியாவிலும் பாகிஸ்தானிலுமிருக்கும் கோடிக்கணக்கான பாமர மக்களை வகுப்புதுவேஷ நரகத்திலிருந்தும், பசி பட்டினியினின்றும் பாதுகாத்தவர்களாவோம்.

காஷ்மீரில் நமது வெற்றியான உலக முன்னேற்ற சக்திகளுக்கு பேருதவியாக இருக்கும். பாகிஸ்தானிலிருந்து படையெடுத்துவரும் எதிரிகள் காஷ்மீர மக்களை வெற்றிகொள்ள முடியாது. நமது சுதந்திரத்தை நாம் பாதுகாக்க அரும் பாடுபட்டாகவேண்டும். அடிமைத்தனத்தை ஒழிக்கப் போராடும் மக்கள் எவரையும் எவராலும் வெல்ல முடியாது. நமது நாட்டில் மீண்டும் சுகமும் சுபீட்சமும் ஏற்படும் நாள் கூடிய சீக்கிரம் வரும். நம்மைச் சுற்றியுள்ள மலைகள் நம்மை எதிர்த்தாலும் அவைகளையும் முறியடிக்க நாம் வல்லமைகொள்ள வேண்டும். நமது போர் தர்மப் போர். அக்கிரமங்களை ஒழித்துக்கட்டும் உத்தம யுத்தம்.

பண்டித நேரு இன்றிரவு புதுடில்லிக்குப் பயணமானர்.

மாஸகோவிலுள்ள பாரசீக ஸதானிகர்

சோவியத் தலைவரைச் சந்தித்தார்

மாஸகோ, டிச. 6

மாஸ்கோவிலுள்ள பாரசீக சர்க்காரின் ஸதானிகர் ஹாமீத் சயா இன்று சோவியத் தலைவர் நிக்கொலெய் ஷெவர்னிக்கைச் சந்தித்தார். (ராய்ட்டர்)

தூக்கிச்செல்லப்பட்ட பெண்கள்

லாகூர், டிச. 6

பலாத்காரமாக சோரம்செய்யப்பட்ட பெண்களை மீட்பது பற்றி ஏற்படுத்தப்பட்ட இந்தியா-பாகிஸ்தான் கூட்டு ஸதாபனத்தின் கூட்டம் நடைபெற்றது. அபகரித்துச்செல்லப்பட்ட பெண்களையும் குழந்தைகளையும் மீட்டு அவர்களது குடும்பங்களில் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டுமென்று பாகிஸ்தான் அகதிகள் மந்திரி கஜ்னுபர் அலிகான் தெரிவித்தார். பலாத்காரமாக தூக்கிச் செல்லப்பட்ட பெண்களையும் பலாத்காரமாக மதமாற்றப்பட்ட பெண்களையும் மீட்பதுபற்றி கூட்டத்தில் ஆலோசனை நடைபெற்றது.

ஹைதராபாத் செயல் கமிட்டி

சென்னை, டிச. 5

நிஜாம் சமஸதான காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ ராமானந்த தீர்த்தா சமஸதான சர்க்கார் அதிகாரிகளுடன் நடத்திய சம்பாஷணைகளை குறித்து செயல் கமிட்டியில் இன்று மேற்கொண்டு விவாதிக்கப்பட்டது. இந்த செயல் கமிட்டிக் கூட்டம் உய்யூர் ஜமீன்தார் ஜாகையில் நடைபெற்றது,

இன்று நீண்ட நேரம் காலை 8 மணி முதல் மத்தியானம் 1 மணி வரையில் விவாதிக்கப்பட்டது.

செயல் கமிட்டித் தலைவர் ஸ்ரீ பி. ஜி. பிந்துவின் தலைமையில் நடந்த இக் கூட்டத்திற்கு ஸ்வாமிஜியைத் தவிர கமிட்டியின் காரியதரிசி எம். ராமச்சந்திர ராவ், விளம்பர அதிகாரி ஸ்ரீ வி. பி. ராஜு, ஸ்ரீ எம். ஷராப் எஸ். கே பிராணே சாச்சார், கிருஷ்ணச்சார், ஜோஷி டாக்டர் மெல்கோட் முதலியோர் கலந்து கொண்டனர்.

மைசூர் தலைவர்களுடன் சம்பாஷணை

சென்னை, டிச 5

மைசூர் சமஸ்தான காங்கிரஸ தலைவர் ஸ்ரீ சித்தலிங்கையா காரியதரிசி ஸ்ரீ ஏ. ஜி. ராமச்சந்திரராவ் ஸ்ரீ எஸ கிருஷண சர்மா ஆகியோர் இன்று காலை பெங்களூரிலிருந்து சென்னை வந்து சேர்ந்தனர். வந்தவுடன் இவர்கள் நிஜாம் சமஸதான காங்கிரஸ தலைவர் ஸ்ரீ ராமானந்த தீர்த்தாவையும் இதர செயல் கமிட்டி மெம்பர்களையும் சந்தித்துப் பேசினர்.

நிதி உதவ வேண்டுகோள்

சென்னை, டிச 5

நிஜாம் சமஸதானத்தில் நடக்கும் மக்கள் போராட்டத்திற்கு உதவ ஸ்ரீ ஜ ஹரிசர்வோத்தம ராவ் தலைமையில் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது ஸ்ரீமான்கள் காஸா- சுப்பராவ் வி சக்கரைச் செட்டியார், கே ஜி, சிவஸ்வாமி அல்லா பிச்சை முதலியோர் இக்கமிட்டியில அங்கத்தினராயிருக்கிறார்கள். ஸ்ரீ டி. செஞ்சையா பொக்கிஷதாரால் சமஸதான காங்கிரஸ் போராட்டம நீடித்து நடக்க வேண்டியிருக்குமாதலால் இந்நிதிக்கு எல்லோரும் தாராளமாக உதவ வேண்டுமெனக் கோரப்படுகிறது.

அனுமதிச் சீட்டு

சென்னை, டிச. 4

தற்சமயம் தற்காலிக ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதால் ஹைதராபாத் பிரஜைகளுக்கு ஹைதராபாத் செல்ல அனுமதி சீட்டு வழங்க இந்திய சர்க்கார் சம்மதிக்கக் கூடுமென்று இன்று சென்னை மேல் சபையில் டாக்டர் சுப்பராயன் கேள்விகளுக்கு பதிலளித்துக் கூறினர்.

அனுமதி சீட்டு பெற ஏற்படுத்தப்பட்டிருக்கும் நடை முறைகளை டாக்டர் சுப்பராயன் விளக்கினர்.

நிஜாம் மீது குண்டு வீசியவர்

ஹைதராபாத், (தக்ஷணம்) டிச 5

நேற்று நிஜாம்மீது குண்டு வீசப்பட்டது சம்பந்தமாக இக்குண்டு எறிந்தவர் உட்பட இதுவரை 6 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இச் சம்பவத்திற்கு உடந்தையாக இருந்ததாக கூறப்படும் மூவர் இன்று கைது செய்யப்பட்டனர்.

இச் சம்பவத்தைப்பற்றி இப்பொழுது மேலும் சில விபரங்கள் கிடைத்துள்ளன. ஸ்தலத்தில் கைது செய்யப்பட்டுள்ள நாராயண ராவ் தான் உள்ளூர் சட்டக் கல்லூரியின் மாணவர் என்று தெரிவித்தார். வேறு இரு மனிதர்களுடன் இவர் கிங்ரோத ரோடுக்கு சமீபம் உள்ள சர்ச் சந்து வழியாக வந்து நிஜாம் கார் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாராம் பிறகு நிஜாம் கார் கண்ணில் தென்பட்டதும் ஜோபியிலிருந்து ஓர் கை வெடி குண்டை வெளியிலெடுத்து அக்கார் மீது வீசினராம். ஜோபியிலிருந்து மற்றோர் குண்டை வெளியிலெடுக்க முயன்றபோது இவர் பிடிபட்டார்.

இக்குண்டு வெடித்தபோது இதன் துண்டுகள் குறி தவறி கார் கதவில் அடித்ததால்தான் அதிர்ஷ்டவசமாக நிஜாம் தப்பியதாக கூறப்படுகிறது. வீசப்பட்ட குண்டும் காரில் மோதி வெடிபடவில்லை

நாராயண ராவ் எவ்வித அரசியல் கட்சியையும் சேர்ந்தவரல்லவென்று கூறப்படுகிறது ஆனுல் அரசியல் லட்சியங்களை பெற பலாத்கார நடவடிக்கைகளில் நம்பிக்கையுள்ளவர்களில் இவரும் ஒருவராவர் என்று தெரிகிறது.

கைது செய்யப்பட்டவர்கள் இன்று ஓர் மாஜிஸ்டிரேட் முன்பு ஆஜர் செய்யப்பட்டு போலிஸ காவலில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை-பாகிஸ்தான் தந்திக் கட்டணம்

கராச்சி, டிச. 6

இலங்கை சர்க்கார் இலங்கையிலிருந்து பாக்கிஸ்தானுக்கு அனுப்பப்படும் தந்திகள் சம்பந்தமாக கட்டணத்தை 1948 ஜனவரி முதல் கொண்டு திருத்தியமைக்க முடிவு செய்யமுடியும். பாகிஸ்தான் சர்க்கார் இலங்கைக்கு அனுப்பப்படும் தந்திகள் சம்பந்தமாக 1947 டிசம்பர் முதல் தேதியிலிருந்து கட்டணததைத் திருதத உத்தேசித்திருந்தனர். ஆனுல் இலங்கை சர்க்காரைப பின்பற்றி பாகிஸ்தான் சர்க்காரும் இப்பொழுது ஜனவரி முதல் கட்டணத்தை திருத்த தீர்மானித்திருக்கின்றனர்.

7 பேர்களுள்ள பாகிஸதான் மந்திரி சபை 9 பேர்களாக டிசம்பர் 31-ந் தேதி முதல் அதிகரிக்கப்படும். கிழக்கு வங்காளத்திலுள்ள முஸலிம் லீக் தலைவர் ஒரு மந்திரியாக சேர்க்கப்படுவார். இப்பொழுது பிரதம மந்திரியே பாதுகாப்பு மந்திரியாக இருப்பதால இனி பாதுகாப்புக்கு ஒரு பிரத்தியேக மந்திரி நியமிக்கப்படுவார்

இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் வர்த்தக கமிஷனர் திரு காட்பிரே பாகிஸதானில் பிரிட்டிஷ் வர்த்தக கமிஷனராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பாகிஸதான் சர்க்காரின் பொருளாதார ஆலோசகராக இருந்த ஸர் ரோலண்ட்ஸ வேலையிலிருந்து விலகி இன்று பிரிட்டனுக்குப் பயணமானர்.

சென்னை மாஜி கவர்னர் இன்ஸால்வெண்ட் ஆன காரணம்

'குதிரைப் பந்தயத்திலும் பங்கு சூதாட்டத்திலும் நஷ்டம்'

கோர்ட்டில் வாக்குமூலம்

லண்டன், டிச 4

1939-ம் வருடம் முதல் 1946 வரை சென்னை மாகாணத்தின் கவர்னராக இருந்தவர். ஆர்தர் ஹோப் இன்று இன்ஸால்வெண்ட் கோர்ட்டில் விசாரிக்கப் படுகையில். குதிரைப் பந்தயங்கள் பங்கு மார்க்கெட் சூதாட்டம் கடன் வாங்கிய பணத்திற்குக்கொடுத்த அதிக வட்டி, 1929-ம் வருடம் முதல் 1939 வரை வருமானத்திற்கு மேல் செய்த செலவு முதலியவற்றினுல் தான் தாம் இந்தக் கதிக்கு வந்ததாகக் கூறினர்.

தமக்கு 85,152 பவுண் கடனும் 12,043 பவுண் சொத்தும் இருப்பதாகவும். பங்கு மார்க்கெட் வர்த்தகத்தில் கிடைத்த நஷ்டத்தை ஈடு செய்வதற்காகக் கடன் வாங்கியதாகவும் ஸ்ரீ ஹோப் அறிவித்தார் விசாரணை முடிந்துவிட்டது.

ராஜாஜி பெயரால் உபகார சம்பளம்

காசி மடம் ரூ 10,000 நன்கொடை தருகிறது

கும்பகோணம், டிச. 4

மேற்கு வங்காள கவர்னர் ஸ்ரீ ஸி. ராஜகோபாலாச்சாரியாரின் பெயரால் திருப்பனந்தாள் காசிமடம் ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தி தம்பிரான் சுவாமிகள் ரூ. 10,000 கொடையளித்து மேற்படி தொகையிலிருந்து வரும் வருமானத்தில் சென்னை விவேகானந்தா கல்லூரியில் படிக்கும் இரு மாணவர்களுக்கு தலா ரூ 135 உபகாரச் சம்பளம் அளிக்கவேண்டுமென்று கோரியிருக்கிறார். இம்மாணவர்கள் தகுதியுள்ள ஏழைகளாயும் தமிழ் இரண்டாவது பாஷையாகவும், சைவ சித்தாந்த தத்துவ சாஸ்திரத்தை இஷ்ட பாடமாகவும் எடுத்துக் கொண்டவர்களாயிருக்க வேண்டும். 'ஸ்ரீ ராஜாஜி சைவ சித்தாந்த உபகாரச் சம்பள பரிபாலன நிதி' என்று இதற்கு தம்பிரான் பெயர் கொடுத்திருக்கிறார்.

தேவாரப்பாட்டு பரிசுகள்

ஸ்ரீலஸ்ரீ தம்பிரான் சுவாமிகள் மற்றும் ரூ. 5,000 மாயவரம் நகர சபைக்கு அளித்திருக்கிறார். முனிசிபல் எல்லைக்குள் இருக்கும் ஹைஸ்கூல் மாணவர்களில் நன்றாக தேவாரம் படிக்கிறவர்களுக்கு ரொக்க பரிசுகள் வழங்க இத்தொகையின் வருமானம் உபயோகிக்கப்படும். தர்மபுரம் ஆதின ஸதாபகரும் பெரிய மஹானுமான ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த சுவாமி பெயரால இந்த மான்யம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

சிங்களப் பத்திரிகை எழுதுவது:

தாய்மொழிப் பேச்சுரிமைக்குப் போராடுக

அதிகார பீடத்திலிருக்கும் ஆங்கில பாஷா வெறியர்கள் போக்கு

தாயார் ஊட்டிய மொழிகளுக்குப் பாராளுமன்றத்தில் தடையா?

யூ. என். பி.க்களின் ஊழல்கள் வெளியாகின்றன

குருநாகல் தொகுதி பார்லிமெண்ட் அங்கத்தவர் திரு ஸ்ரீ நிசங்காவின் சென்ற ஞாயிற்றுக்கிழமை வெளிவந்த "ஹெலதிவ" என்னும் சிங்களப் பத்திரிகையில் "அக்ந்தி" எழுதுவது:

வரிப் புலிக்கு அதனுடைய வரியை மாற்றமுடியாது. அதுபோல வேஷம் போட்ட வரிப் புலியின் சுபாவம் எந்தச் சமயத்திலும் வெளிப்பட்டு விடும் என்பதை மறுக்கமுடியாது. இதைப்பற்றி உவமானம் கூறுவதற்கு காரணம் யூ. என். பியினர் பின்பற்றும் சில கொள்கைகளேயாகும். தங்களுக்குள்ளேயிருக்கும் குப்பைகளை எப்படித்தான் மறைக்க முயன்ற போதிலும், யூ என் பியினரின் சுயமான தோற்றமும் குட்டுகளும் பகிரங்கப்பட்டே விடுகிறது.

பார்லிமெண்டுத் தலைவர், யூ. என். பியின் உறுதூண் என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான். அவரின் சில தீர்மானங்கள் யூ. என். பியின்முடிவுதான் என்று ஒப்புக்கொள்ளுவதில் குற்றமேதும் இல்லை. பார்லிமெண்டிலே சுவ பாஷையில் பேசுவதை தலைவர் எதிர்க்கிறார் இந்த எதிர்ப்பை, யூ என். பியின் எதிர்ப்பாகவே நிச்சயமாக எண்ணலாம், அப்படியல்லவென்று கூறுவதற்குள்ள காரணமெதுவும் இல்லை.

ஒன்றரை வருடங்களுக்கு முன் ஒரு சிங்கள தினசரியில் பிரசுரமான ஒரு செய்தி எனக்கு இன்னும் நினைவிலிருக்கிறது. அச்செய்தியில் பார்லிமெண்டிலே சுவ பாஷைகளில் பேசுவது சம்பந்தமான பிரச்னையை கிளப்பப்பட்டிருந்தது மேலும் அச்செய்தியில் அரசாங்க சபைத் தலைவர் சிங்களம் படித்துக்கொள்ளமுயற்சித்துக் கொண்டிருக்கிறார் என்றும் உப தலைவர் தமிழ் படித்துக் கொண்டிருக்கிறார் என்றும் காணப்பட்டது,

இதுமாத்திரமல்ல; பார்லிமெண்டிலே முதலாவதாக ஐரோப்பியர்கள் தான் சிங்களத்திலும் தமிழிலும் பேசுவார்களென்றும் குறிப்பிடப்பட்டிருந்தது அன்றைக்கு இச்செய்தியை நான் கண்டதும் எனக்குண்டான சந்தோஷத்திற்கு அளவேயில்லை. இடதுசாரிகள் என்ன சொன்னபோதிலும் வருங்கால பார்லிமெண்டினுல் சுவபாஷைகளுக்கு புதுயுகம் பிறக்கப் போகிறதென்று திடமாக எதிர்பார்த்தேன். எனினும், இன்று பார்லிமெண்டில் மொலமூரே பண்டார அவர்களின் முடிவிலிருந்து தெரிவதாவது, நான் இவ்வளவு காலமும் வாழ்ந்தது மூடர்களின் உலகத்திலே என்பதுதான்.

சிங்களச் சுருக்கெழுத்து சம்பந்தமான பேராசிரியர்கள் சிலர் நம்மிடையே இருக்கிறார்கள். இவர்களில் ஒருவர் பிரசித்திபெற்ற பத்திரிகை ஆசிரியராவர். அவர் சிங்கள சுருக்கெழுத்து புஸ்தகங்களையும் வெளியிட்டிருக்கிறார். சிங்கள சுருக்கெழுத்தில் திறமை வாய்ந்தவர்கள்பலர் இருப்பதோடு, தமிழ் சுருக்கெழுத்து படித்தவர்களும் பலர் இருக்கிறார்கள். சிங்கள சுருக்கெழுத்தாளர் ஒருவர் கல்வி இலாகாவில் இது சம்பந்தமாக ஊழியம் புரிவதையும் நானறிவேன். இது சம்பந்தமான விஷயங்களை சரியானபடி அறியாமல் சுருக்கெழுத்தாளர் கிடைப்பதரிது என்ற சாக்குப் போக்கைக் காட்டி பார்லிமெண்டுத்தலைவர் திருமோலமூரே பண்டார ஹமுதருவோ சுவ பாஷையில் பேசுவதைப்பற்றி என்ன அபிப்பிராயப்பட்டாறென்று சரியாக நிர்ணயிக்க முடியாது.

சட்டசபையும் அரசாங்க சபையும் ஆங்கிலம் படித்தவர்களின் களியாட்ட சாலையாக இருந்ததைப்போன்று பார்லிமெண்டும் ஆகிவிடுமென்று நினைப்பது தவறு. ஏனென்றால் பார்லிமெண்டிலே சுவபாஷைகளில் பாண்டித்யம் வாய்ந்தவர்கள் இருக்கிறார்கள் எனவே சுவ பாஷையில் அபிமானமுள்ள அங்கத்தினர்கள் இதற்காக முன்னின்று போராடுவார்களென்பது நிச்சயம். இந்த போராட்டத்தை பொதுமக்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்களென்று புகையிரதத்திலும் பஸ்ஸிலும் பலர் பேசிக் கொள்கிறார்கள்.

எல்லாளன் சமாதியில் புராதன கற்தூண் காணப்பட்டது

கொழும்பு, டிச. 7

அநுராதபுரத்தில் எல்லாளராஜாவை அடக்கம் செய்த இடம் இப்போ ஒரு மணற்திடலாயிருக்கிறது. அதை இலங்கை புதைபொருள் ஆராய்ச்சி இலாக்கா கிளறி ஆராய்ந்து வருகின்றது. ஆராயும்போது 16 அடி 10 அங்குல உயரமுள்ள ஒரு கற்தூண் காணப்பட்டது. அதிலேயுள்ள சிற்ப வேலைகளிலிருந்து எல்லளனுடைய சமாதியின் மேற்கட்டிடத்தின் அக்காலச் சிறப்பை யூகிக்கத்தக்கதாயிருக்கிறது. இதைவிட ஏனைய தூண்களும் கற்களும் அக்கட்டிடம் இடிந்து விழ்ந்த காலத்திலேயே அப்புறப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் இத் தூணின் இரு பக்கங்களில் அழகான செடி வேலைகளும் பூ வேலைகளும் செய்திருக்கிறார்கள் அத்துடன் அடியில் ஒரு கையில் சங்கு தாங்கித் தாமரைப் பூவிலே இருக்கும் ஒரு தெய்வத்தின் சிலையும் பொறிக்கப்பட்டிருக்கிறது. இது விஷ்ணுவுக்கும் பிரம்மாவுக்கும் உள்ள குணங்கள் ஒருங்கு சேர்ந்ததாக காணப்படுகிறது.

இதைவிட புராதன நாணயங்களும் காணப்பட்டன.

வெங்காயமும் உருளைக் கிழங்கும் வந்திறங்கின

கொழும்பு, டிச. 7

625 டன் வெங்காயமும் 75 டன் உருளைக் கிழங்கும் பம்பாயிலிருந்து மலாயா என்னும் கப்பலில் வந்து சேர்ந்தன எகிப்து தேசத்திலிருந்து வெங்காயம் வருவிப்பதைச் சுகாதார இலாகாவால் தடைசெய்த பின்னர் வெங்காயம் முதற் தடவையாக இப்போது தான் இறக்குமதி செய்யப்பட்டது. இதுவும் இந்தியா அரசாங்கத்தார் எங்களுடைய வேண்டுதலின் பேரில் அனுப்பியதாகும்.

இலங்கை வங்கிக்கு ரூ. 750,000 லாபம்

கொழும்பு, டிச. 7

நேற்று நடந்த இலங்கை வங்கியின் ஒன்பதாவது வருடாந்தக் கூட்டத்தில், இவ் வருடம் வங்கிக்கு ரூபாய் 750,000 லாபம் கிடைத்துள்ளதாக ஸர். ஏர்னஸ்ட் டி. சில்வா தெரிவித்துள்ளார்.

இது சென்ற வருடத்திலும் பார்க்க நூற்றுக்கு எண்பத்தைந்து விகிதம் கூடிய லாபமாகும்.

வரிகூட்டிய உணவுப்பொருட்கள் இறக்குமதியாகா

வியாபாரிகள் பெரிய ஓடர்களை ரத்துச் செய்து விட்டனர்

கொழும்பு, டிச 7

நிதி மந்திரியால் கூட்டப்பட்ட வரிகள் ஏற்றப்பட்ட பொருள்களில் பலவற்றை அனுப்பவேண்டாம் எனக் கொழும்பிலுள்ள பல பெரிய வியாபாரிகள் தாங்கள் எங்கெங்கிருந்து வருவிக்கிறார்களோ அவர்களுக்கு அறிவித்திருக்கிறார்கள் இவற்றில் "அநாவசியமான", உணவுப் பொருள்கள், பட்டுகள், கார் சைக்கிள் முதலியவற்றின் உப பகுதிகள், றப்பர் சாமான்கள், சங்கீதக் கருவிகள் முதலியன அடங்குகின்றன. இவைகள் மாசி மாத முற்பகுதியில் இங்கு வந்திறங்கவிருந்தன இவ்வரியால் பேரீச்சம் பழம், புந்திரிகைப் பழ வற்றல், சீஸ், டின் மீன், பீர், இனிப்பு வகைகள் இறக்குமதியும் பாதிக்கப்படும்.

தென்னுபிரிக்க வியாபாரிகளும் இலங்கை வியாபாரிகளும் தங்களுக்குள் இங்கிருந்து அங்கே இல்லாத பொருட்களை அவர்களுக்கு விற்கவும் இங்கேயில்லாத பொருட்களை வாங்கவும் செய்திருந்த தமது ஒப்பந்தங்களை நிறைவேற்ற இயலாமலிருக்கின்றனர்.

இங்கிலாந்திலிருந்து இங்கே வரவிருந்த பொருட்களில் பலவேறு இடங்களுக்கு அனுப்பப்படும்.

சீன முறையில் இலங்கையில் மீன் வளர்ப்பு

மலேயாவில் போய்க் கற்பார்களாம்

கொழும்பு, டிச 7

ஆறு, குளம், சேணி முதலியவற்றின் நல்ல தண்ணீரில மீன் சாகுபடி செய்ய இலங்கை மீன்பிடி இலாகாவார் எண்ணியிருக்கிறார்கள். இதற்காக இவ்விலாகாவின் உபதலைவரான திரு ஈ ஆர் ஏ. டி சில்வா பினுங்குக்கும் மறு மலேய பிரதேசங்களுக்கும் கிட்டடியிற் போவாரென அறியப்படுகிறது.

மலேயாவிலுள்ளவர்கள் சீன முறையைக் கைப்பற்றி வெற்றியடைகின்றனர். இந்த முறையால் இலங்கையிலும் வெற்றி கிடைக்குமாயின் கரையோரப் பிரதேசங்களைப் போல உள்நாடுகளிலும் புது மீன் வேண்டிய அளவு வேண்டிய நேரத்திற் பெற்றுக்கொள்ளலாம் இம் மீன்களும் கடல் மீனைப் போல வாய்க்கு நன்றாக இருக்குமாம்.

புடவை வியாபாரிகள்

இன்னும் சில சலுகைகள் வேண்டுமாம்

கொழும்பு, டிச. 7

இந்தியாவையும் இங்கிலாந்தையும் விட மற்றும் தேசங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட யார் ஒன்று ரூபா 2-50 க்கு மேற்பட்டவிலையுள்ள புடவைகளைச் சில்லறை வியாபாரிகள் மொத்த வியாபாரிகளிடமிருந்து வேண்டியநேரம் பெற்றுக் கொள்ளலாம். பிற இனங்களையெல்லாம் கட்டுப்பாட்டதிகாரியின் அனுமதிச் சீட்டுடன்தான் மொத்த வியாபாரி யிடமிருந்து பெறக்கூடும். ரூபா-2-50 க்குக் குறைந்த ரகங்களுக்கும் இச் சீட்டு முறையை எடுத்துவிடும்படி புடவை வியாபாரிகள் கோருகின்றனர். அப்படிச் செய்தால் சீட்டுமுறையால் ஏற்படும் சுணக்கம் இல்லாமற் போய் எந்த நேரமும் கடைகளில் இப்பொருட்கள் வாங்கக் கூடியதா யிருக்குமென்று கூறுகின்றனர். பொருள் வந்திறங்கினவுடனேயே சில்லறைக் கடையில் இவை விலைப்படக் கூடியதாயிருக்குமாம்,

பிரதம மந்திரியின் காரியதரிசி

கொழும்பு, டிச. 7

திரு. என். டபிள்யூ. அத்துக்கோருள என்பவர் விவசாயமந்திரியின் உபகாரியதரிசியாகவும் பிரதம மந்திரியின் காரியதரிசியாகவும் நியமிக்கப் பட்டிருக்கிறார்,

தென்னுப்பிரிக்க இந்தியர் பிரச்னை

அடுத்தபடி என்ன நடவடிக்கை?

நெட்டால் இந்தியர் சங்கத்தின் அறிக்கை

ஜோஹன்ஸ்பர்க், டிச 6

தென்னுப்பிரிக்க இந்தியர் பிரச்னைபற்றி தென்னுப்பிரிக்க சர்க்காருக்கும் இந்திய சர்க்காருக்குமுள்ள தகராறு ஐக்கிய தேசப் பொதுச் சபையின் அடுத்த கூட்டம்வரை ஒரு வருட காலத்திற்கு ஓய்வுற்று விட்டபடியால், அது சம்பந்தமாக ஐக்கியதேச விவாதங்களால் ஏற்பட்டிருக்கும் விளைவுகளையும், அடுத்தபடியாக என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்வதென்பதுபற்றி யோசிக்கவும் தென்னுப்பிரிக்காவிலுள்ள இந்தியர் ஸ்தாபனங்கள் யாவும் ஒன்று கூடி மகாநாடு நடத்த ஏற்பாடாகி வருகிறது.

டர்பன் நகரில் நெட்டால் இந்தியர் சங்கம் கூடி ஒரு அறிக்கை விடுத்தனர். அதில் தெரிவித்திருப்பதாவது:-

தென்னுப்பிரிக்க இந்தியர் பிரச்னையில் ஐக்கியதேச சபையில் மூன்றில் இரு பங்கு ஆதரவு இல்லாமற் போய்விட்ட போதிலும் அதைப்பற்றி கவலையுறவேண்டிய அவசியமில்லை இதுபற்றி தென்னுப்பிரிக்க சர்க்காரும் இந்திய சர்க்காரும் சமரச மகாநாடு கூடி முடிவு செய்யவேண்டும். தென்னுப்பிரிக்க சர்க்கார், இந்திய சர்க்கார், பாகிஸ்தான் சர்க்கார் இவைகளின் பிரதிநிதிகள் வட்டமேஜை மகாநாடு கூடவேண்டும். சென்ற வருடம் ஐக்கியதேச சபை நிறைவேற்றிய தீர்மானம் இன்னும் நிலைத்திருக்கிறது. இந்த வருடக் கூட்டத்திலும் தீர்மானம் பெரும்பான்மையோர் ஆதரவால் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்றே சொல்லவேண்டும். 1946 வது வருடத் தீர்மானத்தின்படி இரு சர்க்கார்களும் நடந்தாகவேண்டும். இதற்கிடையே நெட்டால் இந்தியர் சங்கம் இந்தியர்கள் மகாநாட்டைக் கூட்டி எதிர்கால நடவடிக்கைபற்றி முடிவுசெய்யும் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் தூதுகோஷ்டி அனுப்ப முடிவுசெய்யும்.

திரு லாரன்ஸ் அறிக்கை

லண்டன், டிச. 6

ஐக்கிய தேச சபைக்கு தென்னுப்பிரிக்காவின் பிரதிநிதியாகச் சென்றிருந்த தென்னுப்பிரிக்க சர்க்காரின் நீதி மந்திரி திரு. எச். ஜி. லாரன்ஸ் தென்னுப்பிரிக்கா திரும்பும் வழியில் இங்கு தங்கினர். அவர் பத்திரிகா நிருபரிடம் பின்வருமாறு தெரிவித்தார்:- தென்னுப்பிரிக்க இந்தியர் பிரச்னை சம்பந்தமாக தென்னுப்பிரிக்க சர்க்காரும் இந்திய சர்க்காரும் கூடிப் பேசினல் அபிப்பிராயப் பேதங்களைத் தீர்த்துக்கொள்ள வசதியாக இருக்கும். ஐக்கிய தேச சபை விவாதத்தால இனி தென்னுப்பிரிக்கா ஒரு குற்றவாளியாகக் கருதப்பட்டு வந்த நிலைமை மாறியிருக்கிறது. இந்தியர் பிரச்னை உள் நாட்டுப் பிரச்னையென்றே இன்னும் தென்னுப்பிரிக்க சர்க்கார் கருதுகிறார்கள்

1927 லும் 1932 வது வருடத்திலும் செய்துள்ள ஒப்பந்தங்களின் கொள்கையைப் பின்பற்றி அக்கொள்கை எவ்விதம் அமுல் செய்யப்பட்டு வருகின்றனவென்பதை இரு சர்க்கார்களும் கூடி ஆலோசிக்கவேண்டும். இது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியது இரு அரசாங்கங்களின் பிரதம மந்திரிகளின் பொறுப்பாகும். [ராய்ட்டர்]

சமாதான நீதிபதி டிஸ்ட்ரிக் கோர்ட்டில் விசாரிக்கப்படுவார்

காலி, டிச 5

பத்தேகமவில் கெதுன் உயனத் தோட்டத்தைச் சேர்ந்தவரும் சமாதான நீதிபதியாகிய திரு. டபிள்யூ நீல் டி அல்விஸ் என்பவருக்கும் மற்றும் 7 பேருக்கும் எதிராக காலி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை நீதிபதி திரு. என். எம். கே இராசேந்திரன் டிஸ்டிரிக் கோர்ட்டில் விசாரணைக்குப் பாரப்படுத்தியிருக்கிறார்.

உடுகமப் பகுதிப் பாராளுமன்றத் தேர்தலுக்கு முதல் நாள் செப்டம்பர் 17உ-யன்று அப்பகுதி அபேட்சகரான அல்விஸ மற்றும் 7 பேரையும் கூட்டிச் சென்று மற்ற அபேட்சகரான சைமன் அபேவிக்ரமாவுக்குச் சொந்தமான ஒரு காரை மறித்து அதிலுள்ளவர்களை அடித்துக் காருக்கும் சேதம் விளைவித்தார்களெனக் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கின்றனர்.

பி. ஓ. ஏ. சி. விமான விபத்து

ஜெருசலேம், டிச. 6

பாலஸ்தீனத்திலுள்ள லிட்டா விமான நிலயத்திலிருந்து பிரிட்டனுக்கு புறப்பட்ட பி. ஓ ஏ. சி. விமானம் விபத்துக்குள்ளாகி கீழே விழுந்து நொறுங்கியது. அதிலிருந்த 6 பிரயாணிகளில் எவரும் காயமடையவில்லை. [ராய்ட்டர்]

சிறந்த சிங்கள நூலுக்கு பரிசுவழங்க ஏற்பாடு

கொழும்பு, டிச. 7

சிங்களத்தில் நூல்கள் எழுதுபவர்களை ஆதரிப்பதற்காக சிங்கள பாஷாபிவிருத்திச் சங்கத்தார் ஒவ்வொரு வருடமும் சிறந்த சிங்கள நூல் எழுதுபவருக்கு ரூபாய் 250 கொடுப்பதற்குத் தீர்மானித்திருக்கிறார்கள்.

பிரஞ்சு யுத்தக் கப்பலில் சமரசப்பேச்சு

பாவோடாய் கலந்து கொள்வார்

சைகோன், டிச. 6

இந்தோசைனுவின் எதிர்கால நிலைமைபற்றி யோசிப்பதற்காக அன்னும் மாஜி மன்னர் பாவோடாயும் இந்தோசைனு பிரஞ்சு ஹை கமிஷனர் எமில் பொலலார்ட்டும் டொங்கின் கடலில் பிரஞ்சு யுத்தக் கப்பலில் டிசம்பர் 10-ம் தேதிக்குமுன் சந்தித்துப் பேசுவார்கள். [ராய்ட்டர்]

வெண்ணெய் வரிக்கு எதிர்ப்பு

கொழும்பு, டிச. 8

இன்று நடைபெறும் கொழும்பு முனிசிப்பல் சபைக் கூட்டத்தில் பின் வரும் தீர்மானத்தை டாக்டர் குமாரன் ரத்தினம கொண்டுவருவார்:-

'கொழும்பு நகரத்தில் வதிபவர்கள் சார்பாக இச் சபை, வெண்ணெய், பழங்கள், தகர உணவுகள், முதலியவற்றின் மீது விதிக்கப்படவிருக்கும் புதிய வரிகள் பொது மக்களின் சுகாதாரத்திற்குத் தீங்கை விளைவிப்பதாகையாலும் சிறப்பாக வருத்தக்காரர்களுக்கும் குழந்தைகளுக்கும் கெடுதியை விளைக்கக்கூடிய தாகையாலும் பலமாகக் கண்டிக்கிறது.

விஞ்ஞான காட்சிச் சாலை

இலங்கைக்கும் வேண்டும்

கொழும்பு, டிச. 7

இலங்கைக்கு ஓர் விஞ்ஞான ஆராய்ச்சி மன்றமும் விஞ்ஞான காட்சிச் சாலையும் கூடிய சீக்கிரத்தில் அரசாங்கத்தால் நிறுவப்பட வேண்டும் என்னும் பிரேரணை இலங்கை விஞ்ஞான சங்கத்தாரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இச்சபையார் கடந்த 8 தினங்களாக இலங்கைப் பல்கலைக் கழகத்தில் ஓர் மகாநாடு கூடினர்,

ஏ. எல். தம்பியையா வருமான வரி போர்டில் நியமனம்

கொழும்பு, டிச. 7

ஊர்காவற்றுறைப் பகுதி பாராளுமன்ற அங்கத்தவர் திரு ஏ. எல். தம்பியையாவும், விஜி டபிள்யூ ரத்நாயக்கா எம் பி யும் இலங்கை வருமான வரி போர்ட் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

டச்சு-இந்தோனேஷியா தகராறு

அமெரிக்க யுத்தக் கப்பலில் இன்று சமரசப் பேச்சு

பட்டேவியா, டிச. 6

திங்கட்கிழமையன்று பட்டேவியா துறைமுகத்தில் அமெரிக்க யுத்தக் கப்பலில், மூவர் கமிஷன் ஆதரவில் இந்தோனேஷிய பிரதிநிதிகளும் டச்சு பிரதிநிதிகளும் சமரசப் பேச்சுகள் ஆரம்பிப்பார்கள். (ராய்ட்டர்)

துயரம் கொண்டு துன்புறுதீர்கள்
வைத்தியர்களால் கைவிடப்பட்ட எமக்கு முதல் தடவை பாவித்த மட்டில் திருப்தியான சுகம் கொடுத்தது.
சிர நேத்திராஞ்சனத் தைலம்
வ. கந்தையா, C. G. R. கம்பளை சொல்லுவதாவது:
சிர ரோகத்தின் கஷ்டத்தால் கண்ணிலும் உபாதை ஏற்பட்டு பலவித வைத்தியங்கள் செய்தும் சுகம் பெறாது. கடைசித்தடவையாக M. K. ஜெகநாதன் கண்வைத்தியரிடமிருந்து சிர நேத்திராஞ்சன தைலத்தை எடுப்பித்த பாவித்தமட்டில் எனது தலையிடி முதலிய வருத்தங்கள் நீங்கியதுடன் கண்ணுக்கும் பூரணசுகத்தைப்பெற்றேன். இத்தைலத்தின் அபூர்வ குணங்களின் திறமைக்கு எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்ள இயலாது பேப்பர் மூலமாக இதை யாவர்க்கும் பிரசித்தப் படுத்துகிறேன்.
ஒப்பம்
வ. கந்தையா C. G. R. கம்பளை.
சிர நேத்திராஞ்சனத் தைலம்
கண் புகைச்சல், குத்து, கூச்சம், மாலைக்கண், சிவப்பு முதலிய கண் சம்பந்தமான சகல ரோகங்களையும், தும்மல், நீர் வடிதல் முதலிய பீனிச வகைகளையும், கபால இடி, தலைவலி, மயக்கம், இருமல், இளைப்பு, நரம்புத் தளர்ச்சி, மூலச்சூடு ஆகிய ரோகங்களையும் நிவிர்த்தி செய்து, குளிர்ச்சியையும், ஞாபக சக்தியையும் கொடுக்கும். அஸ்மா, காசம், நீரழிவுக்கும் ஓரளவு சுகங்கொடுக்கும். காலம் நீடித்த நோயாளர்கள் நேரிலும் கடிதமூலமும் விபரம் தெரிந்துகொள்ளலாம்.

இழந்த கண்ணொளியை திரும்பவும் ஒளிபெறச்செய்யும்
M.K.ஜெகநாதன்
பெரிய கடை
யுநானி கண்வைத்தியநிலையம்
யாழ்ப்பாணம்
ஏழைகளுக்கு இலவச வைத்தியம்

விலாசம் ஆங்கிலத்தில் தெளிவாய் எழுதுக.
2 அவுன்ஸ் சீசா ரூ. 3-25
4 அவுன்ஸ் சீசா ரூ. 5-50

களைப்பைப் போக்கடிக்க "விற்ரோ"வைப் பருகுங்கள்!

Banish that Yawn
with a
Sparkling Come-Back
The VITTO PRODUCTS COMPANY
DEHIWALA
BEWARE OF IMITATIONS

There's no chance for a yawn if you pause for a drink of VITTO. Refreshed, you rebound to normal. An ice-cold VITTO is more than just a drink. It's a very particular kind of drink -combining those pleasant wholesome substances which do most in restoring you to your normal self.

நீங்கள் கொட்டாவிவிட்டு களைப்படைவதற்குக் காரணமேயில்லை. ஜில்லென்றிருக்கும் குளிர்ந்த "விற்ரோ" பானத்தைப் பருகியதும் நீங்கள் புத்துயிரும் புதிய உற்சாகமும் பெறுகிறீர்கள். தேகாரோக்கியத்தைத் தரும் இனிய பதார்த்தங்கள் இப் பானத்தில் சேர்ந்து உங்கள் களைப்பை விரட்டுகின்றது. என்னே இதன் மகிமை!
போலிப் பானங்களில் ஏமாறுதீர்கள்!
தயாரிப்பவர்கள்:-
விற்ரோ புரொடக்ஸ் கம்பெனி லிமிடெட்.
தெஹிவிலா.

வெளிநாடுகளில் உள்ள இந்திய ராணுவத்தினர்

இம்மாதம் முடியுமுன் திரும்ப அழைக்கப்படுவர்

புதுடில்லி, டிச 6

அரசியல் நிர்ணய சபையில் இந்திய பாதுகாப்பு மந்திரி சர்தார் பல்தேவ் சிங் இன்று பேசுகையில் வெளிநாடுகளில் உள்ள அகில இந்திய துருப்புகளும் இம்மாதம் முடியுமுன் இந்தியாவுக்குத் திரும்ப அழைக்கப்பட்டு விடுவார்கள் என்றும் ஒரு சில நிர்வாக அதிகாரிகள் மட்டும் 1948 மார்ச் 31 வரை வெளிநாடுகளில் இருப்பார்கள் என்றும் தாம் நம்புவதாகக் கூறினார்.

கடந்த நவம்பர் 10ம் தேதி அறிக்கைப்படி வெளிநாடுகளில் 8872 இந்திய ராணுவத்தினர் இருப்பதாகவும் பர்மாவில் உள்ள 4253 பேர்களும் மலேயாவில் உள்ள 4328 பேர்களும் எகிப்தில் உள்ள 15 பேர்களும் மற்றுமிடங்களில் உள்ள 276 பேர்களும் இத்தொகையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் தொடர்ந்து கூறினார். இத்தொகையினுள் பாகிஸ்தான் இராணுவத்தினர் சேர்க்கப்படவில்லை யென்றும் பர்மா, மலேயா, சிங்கப்பூர் முதலிய இடங்களில் உள்ள துருப்புகள் ஆங்காங்கு புனருத்தாரண வேலைகளில் ஈடுபட்டுள்ளனவென்றும் வெளிநாடுகளில் உள்ள இராணுவச் செலவுகள் பிரிட்டிஷ் அரசாங்கமே கொடுப்பதாகவும் அவர் தெரிவித்தார். (ராய்ட்டர்)

ரஷியாவுக்கு அணுக்குண்டு உலோகம்

ஜெர்மன் விஞ்ஞானிகள் தயாரிக்கின்றனர்

பெர்லின், டிச 6

அமெரிக்க இராணுவ அரசாங்க உயர்தர அதிகாரியொருவர் இங்கு நேற்று இரவு பேசுகையில் ஜெர்மனியில் ஆக்கிரமித்துள்ள ஒரு ஆதிக்கஅரசாங்கத்துக்கு அணுக்குண்டுகள் உற்பத்தி முதலியனவற்றுக்கு உபயோகிக்கப்படும் ரேடியோ அலைகளை உணரும் சக்தியுள்ள உலோகம் சம்பந்தமான உற்பத்தித் துறையில் ஜெர்மனிய விஞ்ஞானிகள் இறங்கியுள்ளனர் என்பதற்கு தகுந்த சாட்சியங்கள் இருப்பதாக கூறினார். மேலும் அவர் பேசுகையில் பிரஸ்தாப ஆதிக்க நாடு ரஷியாவே யென்றும் இப்பகுதியில் கள்ள மார்க்கெட்டில் இந்த உலோகம் விற்பனையாவதைத் தடுத்து பறிமுதல்செய்யும் வேலையில் அமெரிக்க இராணுவம் இறங்கியுள்ளதென்றும் இதுவரை அமெரிக்க இரகசிய ஆராய்ச்சிப் பகுதியினரால் சுமார் 10 லட்சம் டாலர்கள் மதிப்புள்ள இந்த உலோகம் கைப்பற்றப்பட்டுள்ளதென்றும் இது சம்பந்தமாக 20 ஜெர்மனியரும் ஒரு டச்சுக்காரரும் கைது செய்யப்பட்டுள்ளனரென்றும் தெரிவித்தள்ளார். (ராய்ட்டர்)

இந்திய இளவரசி மீது லண்டனில் வழக்கு

அமிதமான குடிவெறியில் கார் ஓட்டினாராம்

லண்டன், டிச. 6

கபுர்த்தாலா இளவரசி இந்திரா மீது. குடிவெறியில் கார் ஓட்டியதாகக் குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் எதிரி தாம் குற்றவாளியல்ல எனக் குறிப்பிட்டார். அவர் தற்போது 50 பவுன் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

சாட்சியம் அளித்த போலிஸ் உத்தியோகஸ்தர் ஹைட் பார்க்கிற்குச் சமீபம் ஒரு அகதியை முட்டி விட்டு ஓர் கார் ஓடிச் சென்றதாகவும் ரோட்டின் மத்தியில் கார் போய் நின்றதும் இளவரசி அதிலிருந்து வெளிக் கிளம்பியபோது அவளிடமிருந்து மது நாற்றம் கடுமையாக வீசியதாகவும் தெரிவித்தார்.

இன்னோர் போலிஸ அதிகாரி இளவரசி நிமிர்ந்து நிற்க முடியாதிருந்ததாகக் குறிப்பிட்டார். (ராய்ட்டர்)

கமியூனிஸ்டுகளின் போட்டி சர்க்கார்

பர்மாவில் சம்பவம்

லண்டன், டிச. 5

அடுத்த 6 தினங்களில் சுதந்திர பர்மா ஜனனமாகும். ஜனவரி 4-ம் தேதி பிரிட்டன் பர்மாவிடம் அதிகாரத்தை மாற்றிக் கொடுத்து விடும். பர்மா பிரிட்டிஷ் சாம்ராஜயத்திலிருந்து விலகும் முதலாவது நாடாகும் என்றபோதிலும் அது பிரிட்டனுடன் நெருங்கிய உறவு கொண்டிருக்கும்.

மூன்று ஜில்லாக்களில் கமியூனிஸ்ட் ஆட்சி

ரங்கூன். டிச. 5

பர்மாவின் மத்திய பாகத்திலுள்ள டாங்கோ, பின்மனு, யாமதின் ஆகிய மூன்று ஜில்லாக்களில் கமியூனிஸடுகள் போட்டி சர்க்காரை நிறுவியிருக்கின்றனர் இங்கிருந்து அதிகமான ஆயுதப் போலிஸ படை அனுப்பப்பட்டிருக்கிறது.

கொலை வழக்கு

பர்மா மந்திரிகள் கொலை வழக்கில் இன்று 20 வயதுள்ள மவுஸசின் வாக்கு மூலம்கொடுத்த போது, மாஜி பிரதமர் ஊசா தன்னைப் பயமுறுத்தியதால் தான் கொலையில் ஈடுபட்டதாகத் தெரிவித்தான்.

வழக்கறிஞர் பென்னட் லண்டனிலிருந்து வந்ததும் செவ்வாய்க்கிழமை ஊசாவிசாரிக்கப்படுவார். எதிரி தரப்பில் 52 சாட்சிகளின் விசாரணை புதன்கிழமை ஆரம்பமாகும். (ராய்ட்டர்)

அதிக வேக சக்தியுள்ள கார்கள்

கட்டுப்பாடுகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளன

கொழும்பு, டிச. 7

இம்மாதம் முதல் தேதி தொடக்கம் 11 குதிரைகள் வேக சக்தியுள்ள கார்களும் 16 குதிரைகள் வேக சக்தியுள்ள கார்களும் கட்டுப்பாடுகளிலிருந்து நீக்கப்பட்டுவிட்டனவென்று போக்குவரத்து மந்திரி திரு ஜே. எல். கொத்தலாவல அறிவித்துள்ளார். இதற்கு முன் 9 குதிரைகளின் வேகத்திலுள்ள கார்களே கட்டுப்பாடின்றி விற்பனைக்கு அனுமதிக்கப்பட்டிருந்தன. பத்து குதிரைகளின் வேக சக்தியுள்ள கார்கள் வாங்குவதற்கு மோட்டார் போக்குவரத்து கமிஷனரின் பெர்மிட் வாங்க வேண்டும் இந்தக் கார்களுக்கு இப்பொழுது அதிக கிராக்கியிருப்பதாக தெரிகிறது.

இந்திய டாக்டரின் இலங்கை விஜயம்

கொழும்பு, டிச 6

கல்கத்தா இம்பீரியல் கெமிக்கல் தொழில் பகுதியின் வைத்திய இலாகாத் தலைவர் டாக்டர் ஜே. எம். மங்கலின் தற்போது இலங்கை வந்துள்ளார். அவர் பல வைத்திய ஸ்தாபனங்களையும் பார்வையிட்டு வருகிறார்.

சிங்கள ஜாதியின் பூர்வீகம்

'தியாகி'

இலங்கையில் வசிக்கும் சிங்களவர் ஆரியர் எனக் கூறுங் கூற்று எவ்வளவில் உண்மையானதென்பதை ஆராய்வதே இக் கட்டுரையாளரின் நோக்கமாகும். நமது நோக்கம் உண்மையைக் காட்டுவதற்கேயன்றி, சகோதரர்களாகிய சிங்களவர் மீது இகழ்ச்சியான மனப்பான்மையை உண்டாக்குவதற்கல்லவாகும். நமது நாட்டிலே எங்கள் சகோதரர்களிடையே தமது பூர்வீகத்தைப்பற்றி அறியாமை நிலவுவதை உணர்ந்த சில சுயநலத் தலைவர்கள் மக்களிடையே அகம்பாவ உணர்ச்சியை உண்டாக்கி வகுப்புத் துவேஷத்தை விதைத்து நாசவேலையில் ஈடுபடுவதைக் காணுந்தோறும் உண்மைத் தேசாபிமானிகளின் உள்ளம் துயருறுகின்றது.

விஜயனின் வருகைக்கு முன் இலங்கையில் இயக்கர், நாகர் முதலாய சாதியினர் வசித்தனர். விஜயனும் அவனுடைய தோழரும் இத்தீவுக்கு வரும்போது குடும்பஸ்தர்களாக வரவில்லை. பாண்டிய நாட்டிலிருந்து விஜயனுக்கும் அவனுடைய தோழருக்கும் மனைவிகள் கிடைத்ததாகச் சரித்திரம் கூறுகின்றது. ஆதியிலிருந்தே சிங்கள சாதியினர் தோற்றுவதற்குத் தமிழர் உதவி புரிந்திருக்கின்றனர். இக்கூற்று எவ்வளவு உண்மையென்பதற்குச் சான்றாகச் சரித்திராசிரியர் மென்டிஸ் கூறுவதைக் கீழே காட்டுகிறேன்.

"வேடரையும் ஆரியரையுந் தவிர இன்னோர் சாதியினரும் சிங்களவர் தோன்றுதற்குதவினர்; இவர்கள் திராவிடர் ஆவர் மிகப் புராதன காலந் தொடங்கி இவர்கள் படையெழுச்சிக்காரர்களாகவேனும், குடியேற்றக்காரர்களாகவேனும் வந்தனரென்பதில் ஐயமின்று. பண்டைக்காலத்திலே வந்த திராவிடரிற் பெரும்பாலார் - இக்காலத்திலே கடற்கரையோரத்திலுள்ளவர் செய்வது போன்று - சிங்களத்தையே தாய்மொழியாகக்கொண்டு சிங்களவரோடு கலந்து விட்டனர்" (இலங்கையின் பூர்வ சரித்திரம் - 27-ம் பக்கம்)

வேடரின் கலப்பைப்பற்றி இவ்வாசிரியர் கூறுவதாவது:- "ஆகையினாலே இலங்கைத் தீவின் நாகரீக வளர்ச்சிக்கு இவ்வேடர்கள் செய்யக்கூடிய தொண்டு ஒன்றுமேயில்லையெனக் கூறலாம். சிங்களச் சாதியினர் தோற்றுதற்குதவியதே அவர்கள் புரிந்த முக்கிய தொண்டாகும். ஆரியர் இலங்கையிற் குடியேறிய போது அவர்கள் தம்மினத்தவரான பெண்மக்களைப் போதிய தொகையினராக அழைத்து வந்திருத்தல் இயலாத காரியமாகையினாலே அவர்களிற் பலர் வேடப் பெண்களை மணந்திருத்தல் வேண்டும். பேராசிரியர் செலிக்மன் என்பவரின் கொள்கையின்படி இத்தீவின் உட்பிரதேசங்களிலுள்ள சிங்களவர், வேடருடன் மணமுடித்தமையினால் கலப்புச்சாதியினராகவேயிருத்தல் வேண்டும்" (இலங்கையின் பூர்வசரித்திரம் - 20-ம் 21-ம் பக்கங்கள்)

திராவிடர் இலங்கையிலே புகுந்தமையைப்பற்றி ஆசிரியர் மென்டிஸ மேலும் கூறுவதாவது:- "கி. பி. 6-ம், 7-ம் நூற்றாண்டுகளிலே நேர்ந்த பல்லவ படையெழுச்சிகளுக்குப் பின்னரே, திராவிடர் நாகரிகத்துக்கும் முன்னேற்றந்துக்குமான வகையிலே உதவி புரிந்தனர் எனகாட்ட ஆதாரங்களுள் 14-ம் நூற்றாண்டிலே திராவிடரின் ஆதிக்கம் மகோன்னத நிலையடைந்ததெனலாம். அப்போது யாழ்ப்பாண அரசர் தென் பகுதியினரிடமிருந்து திறையும் பெறுவாராயினர். திராவிடரின் செல்வாக்கு இந்து சமய வந்தனை வழிபாடு அனுட்டானம் என்பவற்றினாலேயே அதிகம் ஓங்கி வளர்ந்தது. 11-ம் நூற்றாண்டிலே இந்து சமயம் திடமாக வேரூன்றியதோடு பிற்காலத்திலே பௌத்த சமயத்தையும் மாறுதலடையச் செய்தது.

மொழி ஆராய்ச்சி நிபுணர்களின் கொள்கைப்படி சிங்கள மொழி ஆரியத்தை மிகவும் தழுவிய திராவிட மொழியாகும். இவ்வாறு பாஷையிலும் இரத்தத்திலும் திராவிடக் கலப்புள்ள எமது சகோதரராகிய சிங்கள மக்களை ஹிட்லரின் ஆரியக் கொள்கை போன்ற ஜாதித்திமிரான பசப்பு வார்த்தைகளைக் கூறுவோர் பிழையான வழியில் நடத்திச் செல்கின்றனர் என்பதற்கு ஐயமில்லை.

இலங்கையென்றால் சிங்கள நாடு-இலங்கையரென்றால் சிங்களவர்-தேசியம் என்றால் சிங்களப் பெருமையைப் பாடுவது-சிங்கக் கொடியை உயர்த்துவது இம்மனப்பான்மை என்று ஒழிந்து இலங்கையானது அங்கு வசிக்கும் சிங்களவர், தமிழர், முஸலிம்கள், பறங்கியர், வேடர் ஆகிய எல்லோருக்கும் சொந்த நாடு என்னும் மனப்பான்மையும் யாவரும் சகோதரர் என்னும் உணர்ச்சியும் உண்டாகுமோ அன்றே நமது நாட்டில் சுதந்திர சூரியன் உதயஞ் செய்வான்.

கொட்டாஞ்சேனை கொலை வழக்கு

பலர் சாட்சியம்

கொழும்பு, டிச 7

கொட்டாஞ்சேனை காலேஜ் வீதியைச் சேர்ந்த திரு ஜி டி. செனிவிரத்தின கொலை செய்யப்பட்டது சம்பந்தமான வழக்கு கொழும்பு தற்காலிக பிரதம மாஜிஸ்டிரேட் திரு வி டி. பண்டித குணவர்தன முன் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இவ்வழக்கில் நுகேகொடையைச் சேர்ந்த கே. ஏ. தர்மசேனவும், பி. எம் செனிவிரத்தினவும் நவம்பர் 1-ம் தேதிக்கும் 7-ம் தேதிக்கும் இடையில் திரு ஜி டி. டி. சில்வாவைக் கொலை செய்ய சதி புரிந்ததாகவும், தர்மசேன, திரு ஜி. டி. டி. செனிவிரத்தினவைக் கொலை செய்ததாகவும் ஸ்ரீமதி செனிவரத்தின இக்கொலைக்கு உடந்தையாக இருந்ததாகவும் குற்றம் சாட்டித் தொடரப்பட்டிருந்தது பெருந் திரளான மக்கள் கோர்ட்டில் குழுமியிருந்தனர்.

ஸ்ரீமதி எம். வாலெஸ் (கொள்ளுப்பிட்டி) மிஸ் ஜி. வாலெஸ் ஆகியவர்கள் ஸ்ரீமதி செனிவிரத்தினவுக்கு ரூ. 500 கடன் கொடுக்கப்பட்டது பற்றி சாட்சியம் அளித்தனர். ஸ்ரீமதி ஏ. போல் தாம் ஸ்ரீமதி செனிவிரத்தினவுக்கு ரூ. 600 கடன் கொடுத்ததுபற்றி சாட்சியம் அளித்தார்.

ஸ்ரீமதி செனிவிரத்தின படிப்பிக்கும் பாடசாலை ஆசிரியைகள் ஸ்ரீமதி எம். டொனா மேரி விஜயசேகரா, மிஸ் டபிள்யூ லீலாவதி, பாடசாலை மாணவன் எச். சுகததாஸா, சிலாரத்ன திரோ, பன்னாசேகரா திரோ ஆகியோர் சாட்சியமளித்தனர். மேற்கொண்டு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.

கதானா கொள்ளைக் கோஷ்டி

நால்வருக்கு தலா பத்து வருட சிறை

நீர்கொழும்பு, டிச 6

நீர்கொழும்பு பகுதியில் கதானா என்னுமிடத்தில் ஜேம்ஸ் அப்புஹாமி என்பவரையும், அவரது மனைவியையும் ராமணாதன் புள்ளே என்பவரையும் தாக்கியதாகவும் ஜேம்ஸ் அப்புஹாமியின் வீட்டில் இருந்த ரூ 2079 மதிப்புள்ள பொருள்களை கொள்ளையடித்ததாகவும் வேறும் பல குற்றங்களும் புரிந்ததாக ஜோஸப் பெரேரா, அந்தோனி பெரேரா, மாட்டின், ஜேம்ஸ் பெர்னாண்டோ ஆகிய நால்வர் மீதும் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு நீர்கொழும்பு அசைஸ் கோர்ட்டில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விசாரணை முடிவில் நீதிபதியால் எல்லா எதிரிகளுக்கும் தலா 10 வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

தேர்தல் தினக் கலவரம்

24 எதிரிகளில் 6 இளைஞர்கள்

கொழும்பு, டிச. 7

கொழும்பு தெற்குத் தொகுதி பாராளுமன்ற தேர்தல் முடிவு விபரம் அறிவிக்கப்பட்டதும் திரு எம். பி. சரவணமுத்துவின் வீட்டுக்கு முன் சட்டவிரோதமாக கூட்டங்கூடி கற்களையும் போத்தல்களையும் வைத்திருந்ததாகவும் வெளிக்கடையைச் சேர்ந்த டபிள்யூ. ஏ. தர்மதாஸா என்பவருக்கு காயம் விளைத்ததாகவும் 24 பேர்கள் மீது குற்றம் சாட்டி கறுவாக்காடுப் பகுதி போலிசாரால் இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

கொழும்பு தற்காலிக பிரதம நீதிபதி திரு வி. டி. பண்டித குணவர்தன முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது 6 இளைஞர்கள் மீதுள்ள வழக்கு இம்மாதம் 20ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. 18 பேர்கள் மீது குற்றஞ்சாட்டிக் கொண்டு வரப்பட்ட வழக்கு இம்மாதம் 22ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

ஸ்டேர்லிங் நிலையைப்பற்றிய சம்பாஷணை

பிற்போடப்பட்டது

கொழும்பு. டிச. 7

லண்டனிலே இம்மாதக் கடைசியில் நடத்தவிருந்த ஸ்டேர்லிங் நிலையைப்பற்றிய பேச்சுகள் இலங்கை டொமினியன் அந்தஸ்தடையவிருக்கும் திகதிக்குப்பின் ஒரு திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. இப்பேச்சுகளை நடத்த திரு ஜே ஆர். ஜெயவர்தனவும் ஸர் ஒலிவர் குணதிலகாவும் லண்டனுக்கு விமானமார்க்கமாகச் செல்ல ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன.

சிவனொளிபாத மலைக்கு யாத்திரைஆரம்பித்துவிட்டது

ஹட்டன், டிச. 6

சிவனொளிபாத மலைக்கு யாத்திரை செல்லும் காலம் இப்பொழுது ஆரம்பித்து விட்டது. யாத்ரீகர்கள் இப்புண்ணிய தலத்துக்கு விஜயம் செய்கின்றனர்.

உங்களைப் பீடித்திருக்கும் கொடிய பிணிகளை
அகற்றிவிட்டீர்களா?

நோயை அறிந்து மருந்துண்டால் பிணி விரைவில் அகலுவது நிச்சயம். எனவே உங்களைப் பீடித்திருக்கும் பிணி என்னவென்று அறிந்தீர்களா? இல்லையானால் அதனை அறிய சிவானந்த சித்தர் வைத்தியசாலையின் பிரதம வைத்தியரும் நாடிப் பரீட்சை நிபுணரும் இலங்கையிலும், இந்தியாவிலும் ரோகதெனக் கைவிடப்பட்ட வியாதிகளையெல்லாம் தீர்த்து பெரும் புகழும் கீர்த்தியும் பெற்ற வைத்திய பூபதி AYUR. Dr. V. K. S. செல்லப்பாபிள்ளை M. A., M. S. (கல்கத்தா) அவர்களைக்கண்டு உங்கள் கை நாடியைப் பரீட்சியுங்கள். அவர் உங்கள் நோயை அறிந்து தகுந்த மருந்து கொடுத்து உத்தரவாதமாய்த் தீர்த்துக் கொடுப்பார். அவர் நவம்பர் (19-ம்உ) தொடக்கம் டிசம்பர் 10 உ வரை எமது கிளை வைத்தியசாலை நம்பர் 23/7 ஸ்டான்லி ரோடு, (வின்ஸர் தியேட்டருக்கு அருகாமையில்) யாழ்ப்பாணத்தில் தங்கி இருந்து நோயாளருக்கு உத்தரவாத சிகிச்சை அளிப்பார். நோய் எதுவானாலும் சரி உத்தரவாதமாக தீர்த்துக் கொடுக்கப்படும். AYUR. Dr. இமானுவேல் ஜோஸப் L. A. M. S. அவர்கள் ஹெட் ஆபீஸ், 92, செட்டியார் தெரு. கொழும்பில் தங்கி இருப்பார். இது சமயத்தை இழாது விடாதீர்கள்.

சிவானந்த சித்தர் வைத்தியசாலை,
92, செட்டியார் தெரு, கொழும்பு.
கிளை: 768, லோவர் வீதி, பதுளை.
23/7, ஸ்டான்லி ரோடு, யாழ்ப்பாணம்.

கிங்ஸ்லியில்
தினசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணிக்கும்
சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்

பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் பாவையர்
நடனங்கள், செவிக்கினிய கீதங்கள்,
கண்ணுக்கினிய காட்சிகள், உள்ளங் கவரும்
உயரிய நடிப்புகள் நிறைந்த

கன்னிகா

தினசரி ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு களிக்கும் படம்
என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், டி. ஈ. வரதன், எம். எஸ. [illegible],
எம். ஆர். சந்தானலக்ஷ்மி, காளி என். ரத்தினம் ஆகியோர் திறம்பட நடித்தது

கிரவுன் தியேட்டர் ஸ்கின்னர்ஸ் ரோடு, மருதானை.
தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும், சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்
சித்ரகலாவின் உன்னத தயாரிப்பு
முதல் நம்பர் நடிகர்கள் எடிஜெயமான, ருக்மணி தேவி மற்றும் பலர் நடிக்கும்
"இழந்த உறுதி"
என்னும் வர்ணம் தீட்டப்பட்ட முதல் சிங்களப் படம்
புதிய இயந்திர அமைப்புகளுடன் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

அற்புதமானது! ஆனந்தமளிப்பது!!
மனதிற்கு பரவசமும் உல்லாசமும் ஊட்டுவது
இப்படியாக பாலர் முதல் பெரியோர்வரை ஏகோபித்து புகழ்வதெல்லாம்
மேனகா மார்க் லொசிஞ்சர்களே!

மேனகா மார்க் லசிஞ்சர்கள் ஒவ்வொன்றிலும் தேகத்திற்கு வலிமை அளிக்க வல்லதும் இரத்த விருத்தியுண்டாக்குவதுமான குளுக்கோஸ் எனும் சத்து சேர்ந்திருக்கிறது அத்துடன் மனதிற்கு நல்மணமும், நற்சுவையும் கொடுக்கக்கூடிய பழரசச் சத்தும் சேர்ந்து இதற்கென்றே இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட நிபுணர்களைக்கொண்டு சாஸ்திரமுறைப்படி தயாரித்து யாவருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய விதத்தில் சரசமான விலையில் டின்களில் அடைத்து விற்கப்படுகின்றது.

மேனகா மார்க் லொசிஞ்சர்
எல்லா முக்கியவியாபாரிகளிடமும்
கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-
ராஜா இன்டஸ்ரியல் வேர்க்ஸ்,
71, புதிய சோனகத் தெரு, கொழும்பு.
Telegram: "SWEETS" Telephone: 2737

கீழ்க்காணும் வியாபாரிகளை நமது முக்கிய விநியோகஸதர்களாக நியமித்திருக்கிறோம்.

V. T. செல்லையா அன் கோ, குருநாகல்
K. முருகேசு அன் கோ, " "
மனோன்மணி ஸ்டோர், கேகாலை Kegalle.
W. E. M. பாஷா சாகிப் அன் கோ, நாவலப்பிட்டி
N. B. அந்திரிஸ சில்வா அன் கோ, கம்பளை
M. சேகு அலி ராவுத்தர் அன் கோ, வத்துகாமம்
A. S. M. முகைதீன் அன் கோ, மாத்தளை
M. T. செல்லையா அன் கோ, கெக்கிராவ
K. சிவகுநாதப்பிள்ளை அன் சன்ஸ், யட்டியாந்தோட்டை
S. நாகமுத்து, ருவான்வெலை.

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ லிமிட்டெட்டிற்காக, 1947-ம் வருஷம் டிசம்பர் மாதம் 8-ம் தேதி இப்பத்திரிகை 194 ஏ, தட்டாரத்தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக்கூடத்தில் அச்சிட்டு கொழும்பு மெயின் [illegible] டில் இருக்கும் சிங்காரம் [illegible] அவர்களால் வெளியிடப்படுவது.